


# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

# வருடாந்த செயல் நிறைவேற்று அறிக்கை

# Annual Perfomance Report

# 2016

නීතිය හා සාමය සහ දක්ෂිණ සංවර්ධන අමාත්‍යාංශය

சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்ச

**Ministry of Law & Order and Southern Development**

# வருடாந்த செயல் நிறைவேற்று அறிக்கை 2016

**சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு**

14வது மாடி, சுஹுருபாய, ஸ்ரீசுபூத்திபுர வீதி,

பத்தரமுல்ல.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| | பக்க எண் |
| 01. அறிமுகம் | 1 - 7 |
| நோக்கம் | 4 |
| பணிக்கூற்று | 4 |
| நோக்கங்கள் | 5 |
| கருமங்களும் பணிப் பொறுப்புகளும் | 6 |
| அமைச்சின் பணிக்குழு | 7 |
| 02. அமைச்சின் ஒட்டுமொத்த செயல் நிறைவேற்றுகை | 8 - 23 |
| 2.1 நாட்டின் பொதுவான மக்கள் வாழ்வின் பேண்தகு நிலையை பேணிச் செல்வதற்கு வழங்கப்பட்ட உதவிகளுக்கிடையே... | 8 - 13 |
| 2.2 அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் பணிப் பொறுப்புகளை செயற்றிறனோடும் பயனுள்ளதாக்கவும் மாற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து | 14 - 15 |
| 2.3 அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் செயற்றினை விருத்திக்கெனக் காணப்படும் சந்தர்ப்பங்களைக் கருத்திற் கொண்டு | 16 |
| 2.4 தென் பிராந்தியத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கை அண்மிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து | 16 |
| 2.5 இலங்கைக்கான சர்வதேச ஒத்துழைப்பு | 16 - 18 |
| 2.6 அமைச்சினதும் அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்களின் முன்னேற்றத்தை எதிர்பார்த்து | 18 - 19 |
| 2.7 அமைச்சுகளுக்கிடையே ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளுக்கு தோள்கொடுத்து | 19 - 20 |
| 2.8 கண்காணிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் செயல் நிறைவேற்றுகை | 21 - 23 |
| 03. பிரிவு ரீதியான செயல் நிறைவேற்றுகை | 24 - 41 |
| 3.1 நிருவாகப் பிரிவு | 24 - 27 |
| 3.2 பொலிஸ் பிரிவு | 28 - 30 |
| 3.3 நிதிப் பிரிவு | 31 - 36 |
| 3.4 திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு | 37 - 39 |
| 3.5. அபிவிருத்திப் பிரிவு | 40 |
| 3.6 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 41 |

# புள்ளிவிபர அட்டவணை விபரங்கள்


| அட்டவணை இலக்கம் | பெயர் | பக்க எண் |
|---|---|---|
| 01. | 2016.12.31 திகதியில் அமைச்சின் பணிக்குழு | 7 |
| 02. | குற்றங்களின் வகைகளுக்கு ஏற்ப அறிக்கையிடல்கள் மற்றும் முன்னேற்றம் | 8 |
| 03. | பெண்களுக்கு மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் அறிக்கையிடல் மற்றும் தீர்வுகள் | 9 |
| 04. | வாகன விபத்துகள் | 10 |
| 05. | போதைப் பொருட்கள் | 10 |
| 06. | போதைப் பொருட்கள் கைப்பற்றப்படும் அளவு | 11 |
| 07. | ஊழல் மற்றும் நியதிக் குற்றங்கள் | 11 |
| 08. | விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய சுற்றிவளைப்புகள் | 12 |
| 09. | பெற்றுக்கொண்ட மற்றும் தீர்க்கப்பட்ட மக்கள் குறைகளின் எண்ணிக்கை | 13 |
| 10. | தென் பிராந்திய அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம் | 22 |
| 11. | பணிக்குழு மாற்றங்கள் - 2016 | 24 |
| 12. | உள்நாட்டுப் பயிற்சிகள் | 25 |
| 13. | அமைச்சின் பணிக்குழு உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுப் பயிற்சிகள் பற்றிய விபரங்கள் | 26 |
| 14. | நிதி ஒதுக்கங்கள் மற்றும் ஈட்டல்கள் - 2016 | 31 |
| 15. | நிதி ஒதுக்கங்கள் மற்றும் ஈட்டல்கள் விளக்கம் – 2016 | 32 |
| 16. | அரச உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் ‘பீ’ கணக்கு – 2016 ம் ஆண்டு | 33 |
| 17. | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிகழ்வு முன்னேற்றம் | 38 |

# 01. அறிமுகம்

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அந்நாட்டில் நிலவும் அமைதியான சூழலே அடிப்படையாக அமைகிறது. அமைதியான நாடொன்றில் நிலைபேறான அபிவிருத்தியை பெற்றுக் கொள்வதற்கான ஒரு முக்கிய காரணியாக சமநிலையான அபிவிருத்தி ஒழுங்குமுறை அமைகிறது. சட்டத்தில் சமநிலையை ஏற்படுத்துவதும், குற்றங்கள், வன்முறைகள், சித்திரவதை, போன்றவற்றை ஒடுக்குவதைப் போன்றே உயிர்களின், சொத்துகளின் பாதுகாப்புத் தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கினை முன்னிலைப்படுத்துவதற்காக 2013/08/16 திகதியுடைய 1823/70ம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தாபிக்கப்பட்ட சட்டமும் ஒழுங்கும் தொடர்பான அமைச்சு, மக்கள் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் அமைதியை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்புக்கூறுவதோடு அதற்குரிய விடயதானங்களை உள்ளடக்கித் தமது செயற்பாடுகளை மேற்கொண்டது.

***'மைத்திரி ஆட்சி – நிலைபேறான நாடு'*** என்ற எண்ணக்கருவை முன்னிலைப்படுத்தி அமைதியான நாடொன்றின் சமநிலையான அபிவிருத்தி ஒழுங்குமுறைக்குள் புகும் அபிலாசையுடன் 2015/01/18ம் திகதி 1897/15ம் இலக்க அதிவிசேட வர்த்தமானி ஊடாக இவ் அமைச்சின் பணியை மேலும் விரிவுபடுத்தி, பொதுமக்கள் அமைதி, அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிறிஸ்த்தவ மத அலுவல்கள் அமைச்சாக தாபிக்கப்பட்டது. அதன் பின்னர் பல சந்தர்ப்பங்களில் அமைச்சு விடயதானங்கள் சேர்க்கப்பட்டும் அகற்றப்பட்டும் செயற்பாடுகளை முன்னெடுக்கப்பட்டதுடன், தாய்நாட்டில் பொதுமக்களின் அமைதியை நிலைநாட்டியதன் மூலம் அமைதியான சூழலை அமைக்கும், மற்றும் தென் பிராந்திய அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு தோள்கொடுத்தும் நாட்டின் சமநிலையான அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்யும் பொறுப்பினை தீவிரப்படுத்தி 2015/11/24ம் திகயிலான 1942/10ம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு நிறுவப்பட்டது.

அதனூடாக யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் நாட்டி ஏற்படக்கூடிய குற்றிங்கள், வன்முறைகள், சித்திரவதை மற்றும் சட்டவிரோதச் செயற்பாடுகளைத் தடுத்தல், நாட்டுக்குத் தேவையான சட்டம் மற்றும் ஒழுங்கினை பேணிப் செல்லல், சமூக ஒழுக்கத்தை நிலைப்படுத்தல், குற்றங்கள் மற்றும் சமூகவிரோதச் செயல்களைத் தடுத்தல், வாகனப் போக்குவரத்தை நிருவகித்தல் போன்ற ஆபத்தான ஔடதக் கட்டுப்பாடு மற்றும் தவிர்ப்பதற்குத் தேவையான காலத்துக்கு ஏற்றதும் பயனுள்ளதுமான தீர்மானங்கள் எடுத்தல் போன்ற மிகச் சிறந்த பொறுப்புகள் பலவற்றை இந்த அமைச்சின் ஊடாக நிறைவேற்றப்படும். அவ்வாறே தென் பிராந்திய பொருளாதார வளங்களை பேண்தகு ரீதியில் பாவித்து தென் பிராந்தியத்தின் தரத்தினை கட்டியெழுப்புவதன் மூலம், மக்கள் வாழ்வைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பங்களிப்பை வழங்குவதைப் போன்றே காலி கோட்டையை பபாதுகாப்பதன் மூலம் நாட்டின் பழங்காலச் சொத்துக்களைப் பாதுகாக்கும் செயலில் உதவியை வழங்குவதும் இவ் அமைச்சிடம் வழங்கப்பட்டுள்ளது.அது தவிர தென் பிராந்தியத்துக்குரிய காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிகழ்வுககளின் செயற்படுத்தப்படும் திட்டங்களுக்கு அனுமதியளிக்கும் பொறுப்பும் மேற்கொள்ளப்படுகின்றது.

அது தவிர இலங்கை பொலிஸ், விசேட அதிரடிப் படை, ஆபத்தான ஔடதக் கட்டுப்பாட்டுத் தேசிய சபை, காலி பாரம்பரியம் அமைப்பு, மற்றும் தெற்கு அபிவிருத்தி சபை ஆகிய நிறுவனங்களுக்கான கொள்கைத் திட்டமிடல், வழிகாட்டல், செயற்பாட்டுக் கண்காணிப்பு, செயல் நிறைவேற்று மதிப்பீடு மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகளுக்குத் தேவையான அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொண்டு அமைச்சு மிகச்சிறந்த பொறுப்புகள் பலவற்றை நிறைவேற்றுகின்றது.

## வழிகாட்டலை உறுதிப்படுத்தி……………

"புதிய அரசியலமைப்புத் திருத்தமொன்றின் ஊடாக நீதிமன்றங்கள், பொலிஸ், தேர்தல்கள், கணக்காய்வு மற்றும் சட்டமா அதிபர் போன்ற நிறுவனங்களின் பக்கச் சார்பற்ற பாதுகாப்புக்காக சுயாதீன ஆணைக்குழுக்களை தாபிப்பேன."

"அரச சேவை அரசின் கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுகின்றது எனவும் பக்கச்சார்பற்ற செயற்பாடுகளை செய்வதாகவும் உறுதிப்படுத்துவதற்காக அரச சேவை மற்றும் பொலிசுக்கு அரசியல் ரீதியற்ற திறன் அடிப்படையொன்றை அறிமுகப்படுத்துவேன."

"அனைத்து மட்டங்களிலுமான நபர்களின் முறையற்ற செயற்பாடுகளால், நாட்டில் நம்பமுடியாத அளவில் பெருகியுள்ள சிறுவர்கள் மற்றும் பெண்கள் பலியாக்கப்படும் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு அதிகூடிய நடவடிக்கைகளை எடுப்பதுடன் அதற்குரிய வழக்கு விசாரணைகள் மிகவும் குறுகிய காலத்தில் முடிக்கப்படுவதற்குத் தேவையான வசதிகளை வழக்குகிறேன். அதனூடாக சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகத்தை முற்றாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன."

(மைத்திரி ஆட்சி... நிலையான நாடு கொள்கை வெளியீடு – பக்க எண் 16)

"போதைப் பொருள் விற்பனையாளர்களைத் தடுப்பதற்கான தேசிய உளவுச் சேவை, விசேட அதிரடிப் படை, இலங்கை சுங்கம், ஆபத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டு அபிவிருத்தி சபை என்பவற்றை ஒன்றிணைத்து விசேட படையணி ஒன்றைத் தாபிப்பேன."

"போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களை மீட்பதற்காக மிகச் சிறந்த மறுவாழ்வு மையம் ஒன்றை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன."

(மைத்திரி ஆட்சி... நிலைபேறான நாடு கொள்கை வெளியீடு – பக்க எண் 24)

## 2016 வரவு செலவுத் திட்ட உரையிலிருந்து..................

“கௌரவ சபாநாயகர் அவர்களே, கிராம மட்டத்தில் சட்டம், ஒழுங்கு மற்றம் பாதுகாப்பினை வளர்க்கும் நோக்கில் இப்போதிருக்கின்ற பொலிஸ் நிலையங்கள் சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றிய கௌரவ அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி பொலிஸ நிலையங்களின் எண்ணிக்கையை 428 லிருந்து 600 வரை அதிகரிப்பதற்கு நான் ஆலோசிக்கின்றேன். அதற்காக 1,000 மில்லியன் ரூபாவை மேலதிக ஒதுக்கமாக பெற்றுக் கொடுப்பதற்கு நாம் ஆலோசனை விடுக்கின்றேன” (382)

“எமது பொலிஸ் உத்தியோகத்தர்கள் மிகவும் வேதனையான நிலையிலேயே பணியாற்றுகின்றனர். அவர்கள் எப்போது அவசர நிலைமைகளின் போது முதலில் பிரதிபலிப்புக் காட்டுபவர்களாக இருப்பதுடன் அவர்கள் பல்வேறான சேவைகளை பொதுமக்களுக்காக நிறைவேற்றுகின்றது. அவர்களுக்கு சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கும் நவீன வாகனங்களை கையாள்வதற்குமான முறைகள் தொடர்பில் தொடர்ச்சியான பயிற்சிப் பாடநெறிகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வழங்கவும் ஆலோசிக்கப்படுகின்றது. இது தொடர்பில் நாட்டின் உள்நாட்டு பொலிஸ் பயிற்சி கல்வி நிலையத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆலோசிக்கின்றேன். இச் செயற்பாட்டுக்காக 100 மில்லியன் ரூபாவை ஒதுக்க ஆலோசிக்கப்படுகின்றது” (383)

“இன்றைய தினமாகும் போது வலையமைப்பு ரீதியான தொடர்பாடல் மிகவும் முக்கியமாகியுள்ளது. எமது பொலிசுக்கு இவ் வசதியைப் பாவித்து அரச நிறுவனங்கள் றமறும் பொதுமக்களிடைய அவசர நிலைமைகளின் போது ஒருங்கிணைப்புக்காக ஈடுபடுத்த முடியும். இதற்காக நான் 250 மில்லியன் ரூபாவை ஒதுக்கம் செய்ய பிரேரிக்கின்றேன” (384)

“எமது அரசு பொலிஸ் சேவையைத் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளதுடன் பொலிஸ் சேவையின் சம்பள முரண்பாடுகள் இரண்டு வருடங்களுக்குள் தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். அக் கொடுப்பனவுகளில் நூற்றுக்கு 50வீதத்தைக் செலுத்துவதற்காக 3,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும” (385)

“மேலும் ஒவ்வொரு பொலிஸ் நிலையமும் தனியான செலவு அலகாகக் கருதப்படுவதோடு அது அவர்களின் நிதி ஒழுக்கத்தை விருத்தி செய்வதற்கும் காரணமாக அமையலாம” (386)

(பக்க எண 63 - 64)

“கௌரவ சபாநாயகர் அவர்களே, தென் பிராந்தியத்தின் பொருளாதாரத்திலுள்ள பங்களிப்பு நூற்றுக்கு 15 வீதமளவாகும். எவ்வாறாயினும், இந்த அளவை அதிகரிப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது என நான் நம்புகின்றேன். இதனால் தென் மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் முயற்சி பிரதானமாக துறைமுக அபிவிருத்தி மற்றும் விமான நிலைய வீதி மற்றும் பொருட்கள் உதவிச் சேவைகள், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள், விவசாய உதவிச் சேவைகளை விருத்தி செய்தல், கிராமிய சுகாதாரம், நகர அபிவிருத்தி போன்ற விடயங்களுக்காக மேற்கொள்ளப்படும். இந்நோக்கத்திற்காக 1,000 மில்லியனை ஒதுக்குவதற்கு பிரேரிக்கப்படுகின்றது” (504)

(பக்க எண் 79)

## நோக்கு

''சட்டத்தை மதிக்கும் நாடு. ஒழுக்கமான சமூகத்துடன் அபிவிருத்தியடைந்த தென் பிராந்தியம்''

## பணிக்கூற்று

“நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டல், அபாயகரமான ஔடதங்கள் பாவனையைத் தடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் தென்பகுதி மக்களின் சமூக, பொருளதார நிலையை நிலைபேறான தன்மையுடன் உயர்த்துதல்”

## நோக்கங்கள்:

- நாட்டில் வாழுகின்ற அனைவரும் பயம், சந்தேகமின்றி, வாழக்கூடிய அமைதியான சூழலைப் பேணுவதற்காக கொள்கைகளை வகுத்தல் மற்றும் வழிகாட்டுதல்.
- போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக வாகனங்களை ஒழுங்குபடுத்தல், வீதி நெருக்கடிகளைக் குறைப்பதற்கான சட்டங்களைத் தயாரித்தல்.
- பொலிஸ் சேவையின் செயற்திறனை மேம்படுத்துவதற்காகத் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுடன் இணைந்து நடவடிக்கை எடுத்தல்.
- அபாயகரமான ஔடதப் பாவனைப் புரழ்வைத் தடுத்தல் மற்றும் பயன்படுத்துவோருக்கு புனர்வாழ்வளித்து சமூகமயமப்படுத்துவதற்கான கொள்கைகளை வகுத்தல்.
- அம்பாந்தோட்டை விமான மற்றும் துறைமுகம் சார்ந்த கைத்தொழில் சேவைகளை மேம்படுத்தல் உள்ளிட்ட தென் பிராந்தியத்தின் பொருளாதார, சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- தென் மாகாணத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள்.

## கருமங்களும் பணிப் பொறுப்புக்களும்

- சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி விடயப்பரப்பு மற்றும் அமைச்சின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச் சபை நிறுவனங்களின் விடயங்கள் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களை வகுத்தல், தொடராய்வு செய்தல், மதிப்பீடு செய்தல்.

- சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுவதற்கான வழிகாட்டல்கள்.

- சமூக ஒழுக்கத்தை உறுதிப்படுத்தும் பரந்த மறுசீரமைப்பு உள்ளிட்ட தந்திரோபாயங்களை அமுல்ப்படுத்தல்.

- தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுடன் ஆலோசனைகளுக்கமைய பொலிஸ் சேவையின் செயற்திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
- சமூக அனர்த்தமாக மாறியுள்ள பல்வேறு வகையிலான குற்றங்கள் மற்றும் சமூக விரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கும் ஒடுக்குவதற்கும் வழிகாட்டுதல்.

- வாகனப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக வழிகாட்டுதல்.

- அபாயகரமான ஔடதங்களின் பயன்பாட்டைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உதவுதல்.

- கைத்தொழில் மேம்படுத்தல் அடங்கலாகத் தெற்குப் பொருளாதார பிராந்தியத்தைப் பலப்படுத்துவதற்காகப் பொருளாதார, சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் ஒருங்கிணைப்புச் செய்தல்.

- அம்பாந்தோட்டை பொருளாதார வலயம், தெற்கு சுற்றுலா அபிவிருத்தி வலயம், அம்பாந்தோட்டை விமான மற்றும் துறைமுக எரிபொருள் வழங்கல் மையம் உள்ளிட்ட தென் மாகாண உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்ட அமுலாக்கலை ஒருங்கிணைத்தல்.

- தென் மாகாண அபிவிருத்தி சபையை நிறுவுதல்.

- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களுக்குமுரிய செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்.

- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை கண்காணித்தல்.

## அமைச்சின் பணிக்குழு

### 2016.12.31 ஆம் திகதியிலான அமைச்சின் பணிக்குழு

புள்ளிவிபர அட்டவணை - 01

| தொடர் இலக்கம் | பதவி | சேவை | வகுப்பு | சம்பள அளவீடு | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | | | 2016.12.31 திகதியில் ஊழியர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிரந்தர | ஓமய | ஒப்பந் | நிரந்த | ஓமய | ஒப்பந்த |
| 1 | செயலாளர் | - | - | SL -2006 | 01 | | | 01 | | |
| 2 | மேலதிக செயலாளர் | இ.நி.சே | விசேட | SL 3-2006 | 02 | | | 02 | | |
| 3 | பிரதான நிதி உத்தியோகத்தர் | இ.க.சே | விசேட | SL 3-2006 | 01 | | | | | 01 |
| 4 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இ.நி.சே | I | SL 1-2006 | 03 | | | 03 | | |
| 5 | பணிப்பாளர் | இ.நி.சே | I | SL 1-2006 | 01 | | | 01 | | |
| 6 | பணிப்பாளர் (திட்டமிடல் | இ.தி.சே | I | SL 1-2006 | 01 | | | 01 | | |
| 7 | பிரதான கணக்காய்வாளர் | இ.க.சே | I | SL 1-2006 | 01 | | | 01 | | |
| 8 | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | இ.க.சே | I | SL 1-2006 | 01 | | | 01 | | |
| 9 | உதவி/பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | இ.தி.சே | II/III | SL 1-2006 | 01 | | | 01 | | |
| 10 | உதவிச் செயலாளர் | இ.நி.சே | II/III | SL 1-2006 | 03 | | | 02 | | |
| 11 | கணக்காய்வாளர் | இ.க.சே | II/III | SL 1-2006 | 02 | | | 01 | | |
| 12 | சட்ட உத்தியோகத்தர் | திணைக்கள ரீதியான | II/III | | 01 | | | | | |
| 13 | நிருவாக உத்தியோகத்தர் | | உயர் | MN 7-2006 A | 01 | | | 01 | | |
| 14 | மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்-தமிழ்) | மொ.பெ.சே | I/II | MN 6-2006A | 01 | | | | | |
| 15 | மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்-ஆங்கிலம்) | மொ.பெ.சே | விசேட I | MN 6-2006A | 01 | | | 01 | | |
| 16 | ஒருங்கிணைப்புச் செயலாளர் - செயலாளர் | தற்காலிக | - | - | | 01 | | | 01 | |
| 17 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | த.தொ.தொ.சே | வகுப்பு II வகுப்பு II | MN 6-2006A | 01 | | | | | |
| 18 | புள்ளிவிபர உத்தியோகத்தர் | | I/II | | 01 | | | | | |
| 19 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | அ.உ.சே | III,II,I | MN 4-2006 A | 24 | | | 15 | | |
| 20 | புகைப்படப் பிடிப்பாளர் | தற்காலிக | | | 01 | | | | | |
| 21 | அரச முகாமைத்துவ உதவியாளர் | | III,II,I | MN 2-2006 A | 40 | | | 32 | | |
| 22 | சாரதி | சா.சே | III,II,I விசேட | PL3-2006 | 15 | | | 13 | | |
| 23 | அலுவலக உதவியாளர் | அ.உ.சே | III,II,I, விசேட | PL1-2006 | 18 | | | 16 | | 01 |
| 24 | கமரா செயற்பாட்டு உதவியாளர் | தற்காலிக | | | 01 | | | 01 | | |
| **மொத்தம்** | | | | | 122 | 01 | | 92 | 01 | 02 |

மூலம் - அமைச்சின் நிருவாகப் பிரிவு

பிரதான நிதி உத்தியோகத்தர் பதவியில் கடமையாற்றிய உத்தியோகத்தர் 2016.06.28ம் திகதி ஓய்வு பெற்றதுடன், மீண்டும் 2016.07.14 முதல் 2016.12.27 வரை அவ் உத்தியோகத்தரே ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டார். இலங்கை நிருவாக சேவையின் முதலாம் வகுப்பு பணிப்பாளர் பதவியொன்று தெற்கு அபிவிருத்திச் சபை தாபிக்கப்படும் வரை 2016.12.01ம் திகதி முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அலுவலக உதவியாளர் ஈடுபட்டுள்ள 17 உத்தியோகத்தர்களின் ஒரு உத்தியோகத்தர் பதில் அடிப்படையில் சேவையாற்றுகிறார். அனுமதிக்கப்பட்ட அட்டவணையைத் தவிர அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் உதவிச் செயலாளர்கள் இருவர் (02) (தொழிலாளர் தொடர்புகள்) (இ.நி.சே. அல்லாத) மற்றும் பட்டதாரிகள் இருவர் (02) பணியாற்றுகின்றனர்.

# 02. அமைச்சின் ஒட்டுமொத்த செயல் நிறைவேற்றுகை

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல் மற்றும் தென் பிராந்தியத்தை அபிவிருத்தி செய்தல் ஆகிய அடிப்படைப் பொறுப்பினை ஏற்று அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக 2016ம் ஆண்டுக்குள் பிரதான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பல கருத்திட்டங்களை செயற்படுத்தப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டங்களின் நிறைவேற்றல்கள் ஒட்டுமொத்த ரீதியில் நாட்டில் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும் விதம் நான்கு பிரதான செயல்நிறைவேற்றுகைக் குறிகாட்டிகள் ஊடாக கருத்திற் கொள்ளப்படும்.

- குற்றங்களுக்கான தீர்வுகள் முன்னேற்றம்
- சுற்றிவளைப்புகளில் விசேட அதிரடி படையினரின் பங்களிப்பு முன்னேற்றம்
- செயற்பாட்டு சிவில் பாதுகாப்பு குழுக்கள் மற்றும் செயற்படுத்தப்பட்ட அறிவூட்டல் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை
- அபாயகரமான ஔடதப் பாவனை மற்றும் சுற்றோட்டத்தைத் தடுப்பதிலான முன்னேற்றம்

## 2.1. நாட்டின் பொதுவான மக்கள் வாழ்வின் பேண்தகு நிலையை பேணிச் செல்வதற்கு வழங்கப்பட்ட உதவிகளுக்கிடையே.......

### 2.1.1. நாட்டில் அறிக்கையிடப்படும் குற்றச் செயல்களை உடனடியாகத் தீர்ப்பதற்குத் தேவையான கொள்கை ரீதியான மற்றும் உபாயமுறையிலான வழிகாட்டல்கள் வழங்குதல்

நாட்டில் குற்றச் செயல்கள் அறிக்கையிடல்களில் எதிர்பாக்கப்படாத அளவு மற்றும் அறிக்கையிடப்பட்ட தீர்வுகளின் ஒப்பீட்டு மதிப்பீடு அமைச்சின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் பிரதான குறிகாட்டியாகும். அமைச்சின் வழிகாட்டலின் கீழ் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் காரணமாக 2016ம் ஆண்டில் குற்றச் செயல்கள் அறிக்கையிடப்படும் அளவும் குற்றச் செயல்களைத் தீர்ப்பது தொடர்பில் இடம்பெற்றுள்ள மாற்றங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்படுகின்றது. அதற்கேற்ப 2014ம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 1, 180, 805 ஆக இருந்த குற்றச் செயல்களின் எண்ணிக்கை 2015ம் ஆண்டில், 1,129,555 வரை குறைந்திருந்ததுடன் அது மீளாய்வு ஆண்டில் 1.155,215 ஆக இருந்தது.

**குற்றங்களுக்கு ஏற்ப அறிக்கையிடல்களும் முன்னேற்றமும்.**

புள்ளி விபர அட்டவணை - 02

| குற்றச் செயல் வகை | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|
| | அறிக்கைகள் | தீர்வுகள் | அறிக்கைகள் | தீர்வுகள் | அறிக்கைகள் | தீர்வுகள் |
| அதிகாரத் துஷ்பிரயோகங்கள் | 50,962 | 29,396 | 40,188 | 13,049 | 36,937 | 26,869 |
| சிறு குற்றங்கள் நபர்களுக்கு எதிராக | 42,368 | 30,561 | 43,870 | 30,292 | 45,579 | 30,481 |
| சிறு குற்றங்கள் சொத்துக்களுக்கு எதிராக | 21,827 | 11,691 | 30,685 | 14,407 | 33,349 | 15,969 |
| சிறு முறைப்பாடுகள் | 1,065,648 | 1,063,413 | 1,014,812 | 1,014,291 | 1,039,350 | 1,038,942 |
| மொத்தம் | **1,180,805** | **1,135,061** | **1,129,555** | **1,072,039** | **1,155,215** | **1,112,261** |
| மொத்தம் | | **96%** | | **95%** | | **96%** |

*மூலம் - இலங்கை பொலிஸ்*

அதிகாரத் துஷ்பிரயோகங்களின் தீர்வுகளிலான முன்னேற்றமாக சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்ட அளவாகக் காணப்படுவதோடு சிறு குற்றங்கள் மற்றும் முறைப்பாடுகளில் இலங்கை பொலிசினால் அல்லது ஒட்டுமொத்த பணிக்குழுவிடம் சமர்ப்பித்து அல்லது வழக்குத் தொடுக்கப்பட்டு தீர்வுகள்

வழங்கி முடிவடைந்த அளவு முன்னேற்றமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த குற்றச் செயல்களுக்கான தீர்வுகளின் சதவிகிதம் 2014ம் ஆண்டில் 96%மாகக் காணப்பட்டதுடன் 2015ல் அதன் அளவு 95% வரை 1% ஆல் குறைவடைந்தாலும், அதனை 2016ம் அண்டில் மீண்டும் 96% வரையில் உயர்த்திக் கொள்வதற்கு அமைச்சினால் இலங்கை பொலிசுக்கும் விசேட அதிரடிப் படைக்கும் வழங்கப்பட்ட வழிகாட்டலினதும் சிறந்த பெறுபேறாக அமைந்தது. இதற்காக அதிகாரத் துஷ்பிரயோகங்களைத் தீர்ப்பதிலான முன்னேற்றம் உயர்ந்து செல்வதானது பிரதானமான பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

## 2.1.2. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் தேவையான உதவியை வழங்குதல்

சிறுவர்களுக்கு எதிராக அறிக்கையிடப்பட்ட குற்றச் செயல்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ள அளவுகளைப் போன்றே பெண்களுக்கு எதிராக அறிக்கையிடப்பட்ட குற்றச் செயல்கள் அவற்றுக்கான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ள விதங்களைப் பார்க்கும் போது 2014ம் ஆண்டில் 42% ஆக இருந்த தீர்வுகளின் முன்னேற்றம் 2015ம் ஆண்டில் அமைச்சினால் உரிய நிறுவனங்களுக்குத் தேவையான உரிய வழிகாட்டல் வழங்கப்பட்டதால் 68% வரை தீர்வுகளின் முன்னேற்றம் வளர்ந்துள்ளதுடன் அது 2016ம் ஆண்டில் 56% க்கான தீர்வு முன்னேற்றத்தை அண்மித்துள்ளது என கீழ்வரும் அட்டவணை இலக்கம் 03ல் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களின் உயர்வும் சிறுவர்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் குறைந்துள்ளதும் இதற்கான அடிப்படை ரீதியான காரணமாக அமைந்துள்ளது.

**பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் அறிக்கையிடலும் தீர்வுகளும்**

புள்ளிவிபர அட்டவணை - 03

| குற்றச் செயல் வகை | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|
| | அறிக்கைகள் | தீர்வுகள் | அறிக்கைகள் | தீர்வுகள் | அறிக்கைகள் | தீர்வுகள் |
| சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் | 5,868 | 1,648 | 5,911 | 5,102 | 5,709 | 3,294 |
| பெண்களுக்கு எதிரான குற்றங்கள் | 8,434 | 4,399 | 8,288 | 4,579 | 9,042 | 4,986 |
| மொத்தம் | **14,302** | **6,047** | **14,199** | **9,681** | **14,717** | **8,270** |
| சதவீதம் | | **42%** | | **68%** | | **56%** |

*மூலம் - இலங்கை பொலிஸ்*

## 2.1.3. மக்களின் உயிர்கள் மற்றும் சொத்துக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுமாறு வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

வாகன விபத்துகள் பற்றிய விபரங்களைத் தெளிவுபடுத்தி இணைக்கப்பட்டுள்ள அட்டவணை இலக்கம் 04க்கு ஏற்ப, நாட்டில் போக்குவரத்துக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனங்களின் அளவில் துரித வளர்ச்சி இடம்பெற்று வரும் சந்தர்ப்பத்தில் அதற்கு சமமான விகிதத்தில் வாகன விபத்துக்களின் அளவு அதிகரிக்கும் வேகம் இவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டிருப்பது அதற்கேற்றவாறு எடுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் காரணமாக என்பதை சுட்டிக்காட்ட முடியும். அதற்கேற்ப வாகனத் தவறுகள் மற்றும் வாகன விபத்துகளில் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்தல், தண்டப் பற்றுச்சீட்டுகளை வழங்குதல், வாகன நெரிசலைக் குறைப்பதற்காக வாகனங்களை

முகாமைத்துவப்படுத்த புதிய நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தல் போன்றே வாகன நெரிசலுக்குத் தீர்வு வழங்குவதற்குத் தேவையான சட்டரீதியான படிமுறைகளை எடுத்தல் நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**வாகன விபத்துக்கள்**

**புள்ளிவிபர அட்டவணை - 04**

| ஆண்டு | உயிரிழப்பு விபத்துக்கள் | பாரிய விபத்துக்கள் | சிறு காயங்கள் | நட்டத்தை ஏற்படுத்திய விபத்துக்கள் | மொத்த விபத்துக்கள் | வாகனங்களின் எண்ணிக்கை | 1,000 வாகனங்களுக்கு விபத்துக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| **2014** | 2,261 | 6,847 | 12,950 | 13,992 | 36,050 | 5,633,234 | 6 |
| **2015** | 2,590 | 7719 | 13,095 | 13514 | 36,918 | 6,302,141 | 6 |
| **2016** | 2,824 | 8,148 | 14,604 | 13,510 | 39,086 | 6,795,469 | 6 |

*மூலம்: இலங்கை பொலிஸ்*

## 2.1.4. சட்டவிரோத மதுபானங்கள் மற்றும் போதைப் பொருள் தொடர்பான குற்றங்களை வெளிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

நாடுமுழுவதும் செயற்படும் சட்டவிரோத மதுபானங்கள் மற்றும் போதைப் பொருள் தொடர்பான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்புளை இலங்கை பொலிசிடமிருந்தும் விசேட அதிரடிப் படையிடம் வழங்கி, அதற்குரிய தவறுகளை வெளிப்படுத்தவும் அத் தவறுகளுக்கு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்து முடிப்பதற்கும் இடம் கிடைத்ததால் மீளாய்வு ஆண்டுக்குள் பதவிடப்பட்ட போதைப் பொருள் மற்றும் மதுபானம் தொடர்பான குற்றங்களில் 95% த்தை தீர்த்து முடிக்கும் ஆற்றல் கிடைத்துள்ளது என்பது கீழ்வரும் புள்ளிவிபர அட்டவணை ஊடாக காட்டப்படுகின்றது.

**போதைப் பொருள்**

**புள்ளிவிபர அட்டவணை - 05**

| தொடர் இலக்கம் | குற்றம் | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அறிக்கையிடல்கள் | தீர்வுகள் | அறிக்கையிடல்கள் | தீர்வுகள் | அறிக்கையிடல்கள் | தீர்வுகள் |
| 1 | போதைப் பொருள் தொடர்பான குற்றங்கள் அறிக்கையிடல் மற்றும் தீர்வுகள் | 74,366 | 71,712 | 89,996 | 87,846 | 88,352 | 86,330 |
| 2 | மதுபானம் தொடர்பான குற்றங்கள் அறிக்கையிடல் மற்றும் தீர்வுகள் | 114,790 | 110,234 | 113,944 | 109,256 | 120,105 | 111,028 |
| மொத்தம் | | **189,156** | **181,946** | **203,940** | **197,112** | **208,482** | **197,358** |
| சதவீதம் | | | **96%** | | **97%** | | **95%** |

*மூலம்: இலங்கை பொலிஸ்*

அவ்வாறே நாட்டில் போதைப் பொருள் பரவியுள்ள விதத்தை பகுப்பாய்வு செய்து அதனூடாக அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கின்ற பிரதேசங்களை இனங்கண்டு சுற்றிவளைப்பு மேற்கொள்வதை முதன்மையாகக் கருதி நடவடிக்கை எடுப்பதற்கு உரிய ஆலோசனைகளைப் பெற்றுத் தருவதன் மூலம் நாட்டில் சுற்றிவரும் பெருமளவிலான போதைப் பொருட்களைக் கைப்பற்றிக் கொள்ள முடிந்துள்ளது எனவும் அந்த அளவு 2015ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 180% ல் உயர்ந்துள்ளது என்பதும் கீழ்வரும் புள்ளிவிபர அட்டவணை 06ன் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

**போதைப் பொருட்கள் கைப்பற்றல் அளவு**

புள்ளிவிபர அட்டவணை - 06

| போதைப் பொருள் | கைப்பற்றப்பட்ட அளவு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014 | | | 2015 | | | 2016 | | |
| | கி.கிராம் | கிராம் | மி.கிராம் | கி.கிராம் | கிராம் | மி.கிராம் | கி.கிராம் | கிராம் | மி.கிராம் |
| கஞ்சா | 10,758 | 19 | 886 | 13,253 | 55 | 225 | 36,817 | 698 | 506 |
| அபின் | - | 5 | - | - | 249 | 500 | 15 | 399 | 970 |
| ஹஷீஸ் | 1 | 95 | 107 | 4 | 187 | 630 | 27 | 443 | 650 |
| ஹேரோயின் | 312 | 549 | 4 | 44 | 521 | 89 | 205 | 147 | 430 |
| மோஃபீன் | - | - | 90 | - | - | - | - | 74 | 730 |
| கொக்கேய்ன் | - | 2 | 964 | 81 | 672 | 333 | 1302 | 735 | 42 |
| ஏனைய | 46 | 852 | 961 | 166 | 751 | 909 | 506 | 523 | 334 |
| மொத்தம் | **11,117** | **1,522** | **3,012** | **13,548** | **2,435** | **2,686** | **38,872** | **3,019** | **3,662** |

*மூலம்: இலங்கை பொலிஸ்*

## 2.1.5. ஊழல் ஒழிப்புக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்

விபரச்சாரத் தொழில், விபசார விடுதிகளை நடத்திச் செல்லல் போன்ற 6 உழல் குற்றங்களைப் போன்றே திருட்டுத் தனமாக மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளதல், அனுமதிப்பத்திரம் இன்றி பல்வேறு வர்த்தக/கைத்தொழில்களில் இடுபடல், சட்டவிரோத மரப் போக்குவரத்து, சட்டவிரோத மணல் மற்றும் மண் போக்குவரத்து, போன்ற 31 நியதிக் குற்றங்கள் இன்றைய சமூகத்தின் நிலைப்பாட்டுக்கு மோசமான பாதிப்பினை ஏற்படுத்துவதால் அவற்றை ஒழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் அமைச்சின் ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்புகளின் அடிப்படையில் இலங்கை பொலிசாரின் மற்றும் விசேட அதிரடிப் படையினர் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் பெறுபேறாக 2016ம் ஆண்டில் ஊழல் குற்றங்கள் மற்றும் நியதிக் குற்றங்களின் தீர்வுச் சதவீதம் 95% வரை உயர்ந்துள்ளது என்பதை கீழ்வரும் புள்ளிவிபர அட்டவணை இலக்கம் 07 தெளிவுபடுத்துகின்றது.

**ஊழல் மற்றும் நியதிக் குற்றங்கள்**

புள்ளிவிபர அட்டவணை - 07

| தொடர் இலக்கம் | குற்றம் | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அறிக்கை இடல்கள் | தீர்வுகள் | அறிக்கை இடல்கள் | தீர்வுகள் | அறிக்கை இடல்கள் | தீர்வுகள் |
| 1 | ஊழல் குற்றங்கள் (6) | 1,921 | 1,856 | 1,796 | 1,788 | 1,255 | 1,217 |
| 2 | நியதிக் குற்றங்கள் (31) | 54,877 | 52,998 | 46,290 | 43,896 | 46,171 | 44,177 |
| மொத்தம் | | **56,798** | **54,854** | **48,086** | **45,684** | **47,426** | **45,394** |
| சதவீதம் | | | **97%** | | **94%** | | **95%** |

*மூலம்: இலங்கை பொலிஸ்*

## 2.1.6. விசேட அதிரடிப் படை மேற்கொள்ளும் ஏனைய சுற்றி வளைப்புகள்

அமைச்சின் கீழ் விசேட கருத்திட்டமாக அமுலாகும் விசேட அதிரடிப்பயை ஈடுபடுத்தி நாட்டினுள் ஏற்படும் ஒழுங்கற்ற மற்றும் சிதைந்த வணிகத்தை ஒழிப்பதற்காக கைது செய்யப்பட்ட நபர்களின் அளவு புள்ளிவிபர அட்டவணை இல 08 ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது.





*விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் சுற்றிவளைப்புச் சந்தர்ப்பங்கள்*

**விசேட அதிரடிப் படையின் மேற்கொள்ளும் ஏனைய சுற்றி வளைப்புகள்**

**புள்ளிவிபர அட்டவணை - 08**

| தொடர் இலக்கம் | கைப்பற்றப்பட்டவை | | சம்பவ அளவு | கைப்பற்றப்பட்ட அளவு | கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | கழிவுத் தேயிலை | | 35 | 757,992.000 கி.கிராம் | 53 |
| 2 | பசுக்களை கொண்டு செல்லல் | | 42 | 252 பசுக்கள் | 98 |
| 3 | நுகர்வுக்குப் பொருந்தாத இறைச்சி | | 35 | 2,236.600 கி. கிராம் | 67 |
| 4 | ஆயுதங்கள் மற்றும் வெடிப் பொருட்கள் | | 44 | உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் 43<br>ரிவோல்வர் 01<br>டெற்றனேற்றல் 04<br>கைக்குண்டுகள் 14<br>ஷொட் கண் ஆயுத ரவைகள் 14<br>மோட்டார் ரவைகள் 48<br>தற்கொலைக் குண்டுகள் 41<br>பக்கக் குண்டுகள் 03<br>தோட்டாக்கள் 106 | 43 |
| 5 | சட்டவிரோத மாணிக்கக் கல் அகழ்வு | | 134 | அமுக்க இயந்திரங்கள் 124<br>பக்கோ இயந்திரங்கள் 34 | 490 |
| 6 | போதைப் பொருள் தொடர்பான சுற்றி வளைப்புகள் | மது பானங்கள் | 247 | ஆரசாங்கள் மதுபானம் 4,092<br>சட்டவிரோத 14,901 | 297 |
| | | சிகரட் | 21 | 223,858 | 27 |
| ஏனைய | | | 68 | - | 152 |
| மொத்தம் | | | 626 | | 1,227 |

*மூலம் - விசேட அதிரடிப் படை*

## 2.1.7. மக்கள் குறைகளை முகாமைப்படுத்தும் விதிமுறைகளைச் செயற்படுத்தி



118 அவசர அழைப்புப் பிரிவு

குற்றச் செயலொன்று இடம்பெறும் சந்தர்ப்பத்தில் விரைவாகச் செயற்படுவதற்காக பொலிஸ் நிலையங்களை அறிவுறுத்தல், பொலிசாரால் செயற்படுத்தப்பட தாமதித்த அல்லது செயற்படுத்தப்படாத விடயங்கள் தொடர்பில் உதவி பெறுதல் அரச நிறுவன மற்றும் உத்தியோகத்தர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் மற்றும் குற்றச்சாட்டுகள் விடுக்கப்படுதல் போன்றவற்றை நோக்காகக் கொண்டு இவ்விதிமுறைகள் செயற்படுத்தப்படுகின்றன. அவற்றுக்கிடையே 118 அவசர அழைப்பு இலக்கம் மற்றும் ஜனாதிபதிக்குச் சொல்லுங்கள் திட்டத்தில் இலங்கை பொலிசுக்கு ஏற்புடைய சமர்ப்பிப்புகள் அமைச்சின் மூலம் நேரடியாகவே செயற்படுத்தப்படுவதோடு 119 அவசர அழைப்புப் பிரிவு, பொலிஸ்மா அதிபருக்குச் சொல்லுங்கள், பொலிஸ்மா அதிபர் மக்கள் உதவித் தினம், மக்கள் உதவி மையம் இலங்கை பொலிஸ் மூலம் செயற்படுகின்றது.

அவ்விதிமுறைகளின் மூலம் 2016ம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை கீழ்வரும் புள்ளிவிபர அட்டவணையின் மூலம் காட்டப்பட்டுள்ளது.

**பெற்றுக்கொண்ட மற்றும் தீர்க்கப்பட்ட மக்கள் குறைகளின் எண்ணிக்கை**

**புள்ளிவிபர அட்டவணை - 09**

| தொடர் இலக்கம் | முகாமைத்துவ விதிமுறை | 2016 | | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | தொடர் இலக்கம் | சதவீதம் | |
| 1 | ஜனாதிபதிக்குச் சொல்லுங்கள் | 4,712 | 1,050 | 22% |
| 2 | பொலிஸ்மா அதிபருக்குச் சொல்லுங்கள் | 1,849 | 1,757 | 95% |
| 3 | பொலிஸ்மா அதிபர் மக்கள் உதவித் தினம் | 1,323 | 932 | 70% |
| 4 | மக்கள் உதவி மையம் | 1,785 | 1,176 | 65% |
| 5 | 119 அவசர அழைப்புகள் | 1,002,283 | 997,970 | 99% |
| 6 | 118 அவசர அழைப்புகள் | 48,582 | 40,974 | 84% |
| மொத்தம் | | **1,060,534** | **1,043,859** | 98% |

*மூலம் - 118 அவசர அழைப்புகள் பிரிவு மற்றும் இலங்கை பொலிஸ்*

## 2.2. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் பணிப் பொறுப்புகளை செயற்றிறனோடும் பயனுள்ளதாக்கவும் மாற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து

### 2.2.1. இலங்கை பொலிஸை புதிய வடிவில் மக்களோடு தொடர்புபடுத்தல்

யுத்தத்திற்குப் பிந்திய காலங்களில் அரச நிறுவனங்களில் மீள் கட்டமைப்பு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு காரணியாக இருப்பதுடன், குறிப்பாக பொலிஸ் போன்ற சட்டம் ஒழுங்கை தாபிக்கும் நோக்குடனான நிறுவனங்களை யுத்த மனநிலையிலிருந்து மீட்டு, சமூகப் பெறுமானங்களுக்கு ஏற்ப மறுசீரமைத்தல் மக்கள் நடபுறவுடன் கூடிய பொலிஸை நோக்கிச் செல்லும் பயணத்தில் மேலும் முக்கியமான காரணியாகும். அதற்கேற்ப இலங்கை பொலிசின் இன்றைய நிலையில் காணப்படும் குறைபாடுகளை இனங்கண்டு உரியவாறு இற்றைப்படுத்துவதற்கு ஆலோசனைகளை முன்வைக்கவும், எதிர்காலத்தில் சிறந்த மற்றும் செயற்திறனான பொலிஸ் சேவையொன்றை நாட்டில் தாபிப்பதற்குத் தேவையான திட்டங்களை வகுக்கும் நோக்கில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அப் பிரதான குழு, சட்டம், நிருவாகம் மற்றும் செயற்பாடுகள் என 3 உபகுழுக்களை உள்ளடக்கியதுடன், அதனூடாக பொலிஸ் மறுசீரமைப்புக்கான ஆலோசனைகள் முன்வைக்கப்படும். குழு 2016.07.25 முதல் அமுல்படுத்தப்படுவதுடன், இறுதி அறிக்கை 2017 மே மாதமளவில் கௌரவ அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. இது தொடர்பில் 19.09.2016ம் திகதி பிரித்தானிய பொலிஸ் மீள் ஒருங்கிணைப்பு நிபுணர்களின் பங்களிப்பில் செயலமர்வொன்று நடத்தப்பட்டதுடன், பொலிஸ் மீள் ஒருங்கிணைப்புக்கான மக்கள் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக தனியான இணையத் தளமொன்றை ஆரம்பிப்பதற்கும் பொலிஸ் மீள் ஒருங்கிணைப்பு பற்றிய கருத்துகளைப் பெற்றுக்கொள்ளும் ஆய்வுகள், நிறுவன ரீதியான பகுப்பாய்வு மற்றும் பொலிஸ் உள்ளகம் பற்றிய போதிய ஆய்வுத் திட்டம் ஆகிய 03 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட அங்கே தீர்மானிக்கப்பட்டன.



### 2.2.2. இலங்கை பொலிசுக்கென பல்கலைக்கழகம் ஒன்றைத் தாபித்தல்

இலங்கைப் பொலீஸுக்கான விசேடமான பல்கலைக்கழகமொன்றை நிறுவுவதற்கு 2015 ஆம் ஆண்டு பிரேரிக்கப்பட்டது. அமைச்சினால் அமைக்கப்பட்ட குழுவினால் இப்பிரேரணையைச் செயற்படுத்துவதற்கான திட்டம் வகுக்கப்படுகிறது. அதற்கமைய பொலீஸ் அலுவலர்கள் மற்றும் அதற்கிணையான தொழில்களில் ஈடுபடும் அலுவலர்கள் அடங்கலாக சுமார் 500 மாணவர்களை இப்பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட எதிர்பார்க்கப்படுகிறது. இதன்போது பொலீஸ் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமாணி பட்டம், பொலீஸ் நிர்வாகம் தொடர்பான கலைமாணி பட்டம் உள்ளிட்ட அடிப்படைப் பட்டப் பாடநெறிகளையும் பட்டப் பின்படிப்பு பாடநெறிகளையும் பின்பற்ற வாய்ப்பு கிடைக்கும். பிரித்தானிய நோட்ன்ஹேம், லிவர்பூல் மற்றும் அவுஸ்திரேலிய டிக்கின் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புகளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உத்தேச பொலீஸ் பல்கலைக்கழகத்துக்காக அத்திட்டிய பிரதேசத்திலுள்ள பொலீஸ் திணைக்களத்துக்கு சொந்தமான 16 ஏக்கர் காணி தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழகத்தைத் தாபிக்கும் ஆரம்ப நடவடிக்கைகள் 2106ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.





### 2.2.3 பொலிஸ் உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து

2016 வரவுசெலவுத் திட்ட உரையில் பொலிஸ் சேவையின் சம்பள முரண்பாடுகள் தீர்ப்பதை நோக்காககள் கொண்டு இனங்காணப்பட்ட முரண்பாடுகளை விகிதாசார முறையில் சில வருடங்களில் குறைப்பதற்காக 3,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அவ் ஒதுக்கத்தைப் பாவித்து அமைச்சரவை அனுமதியின் அடிப்படையில் உத்தியோகத்தர்களின் அடிப்படைச் சம்பளத்தின் 17% கொடுப்பனவொன்று 2016ம் வருட ஆரம்பம் முதல் செலுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் 2016.09.28ம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

### 2.2.4. தன்னியக்க தண்டப் பத்திரக் கொடுப்பனவைச் செலுத்தும் விதிமுறையொன்றை தாபித்தல்

வாகனக் குற்றங்களுக்கான தண்டப் பண அறவீட்டை துரிதப்படுத்தலும், தண்டப் பணம் செலுத்துவதை இலகுவாக்கி சேகரிக்கப்படும் தண்டப் பணத்தின் அளவை உயர்த்தி அரச வருவாயை உயர்த்துவதையும் நோக்காகக் கொண்டு வாகனக் குற்றங்களுக்கான தன்னியக்க தண்டப் பணம் செலுத்தும் விதிமுறையொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொண்டு திட்டங்களை செயற்படுத்துவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றும் நிலையான பெறுகைக் கோரல் குழுவொன்றும் அமைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.2.5. ஒட்டுமொத்த இலங்கையின் குடும்பங்கள், வதிவிடக்காரர்கள் மற்றும் நிறுவனங்களின் தரவுகளை பதிவுசெய்தல்.

நாட்டில் வாழும் குழும்பங்கள், வதிவிடக்காரர்கள் மற்றும் நிறுவனங்களை பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் (76)ம் வாசகத்திற்கேற்றவாறு, பொலிஸ் சுற்றுநிருபம் இலக்கம் 2225/70 க்கு ஏற்ப பொலிஸ் நிலையங்கள் ஊடாக பதிவுசெய்தல் இடம்பெறும். 2007ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2,773,740 குடும்பங்கள் மற்றும் 11,104,523 பதிவுசெய்யப்பட்டிருப்பதுடன் மேலும் பதிவி செய்தல்கள் இடம்பெறும்.

### 2.2.6. இலங்கை பொலிசுக்கென புதிய நெறிமுறைகள் கட்டமைப்பொன்றை அமுல்ப்படுத்தல்

பொலிஸ் சேவையை தொழில் ரீதியானதைப் போன்றே தர ரீதியாகவும் உயர் தரத்திற்கும் கொண்டுவரும் நோக்கில் பொலிஸ் நெறிமுறைகள் கட்டமைப்பொன்றை அமுல்படுத்தல் சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி கௌரவ அமைச்சர், அமைச்சு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இலங்கை பொலிஸ் ஆகிய அனைத்துத் தரப்பினரதும் பங்களிப்பில் 2017.08.24ம் திகதி இடம்பெற்றது.



## 2.3. அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் செயற்றினை விருத்திக்கெனக் காணப்படும் சந்தர்ப்பங்களைக் கருத்திற் கொண்டு

2016.12.08ம் திகதி குடிமக்கள் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பை நோக்காகக் கொண்டு குற்றங்களைத் தடுப்பதற்கு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தக் கூடிய விதம் மற்றும் அதற்கு மைக்றோசொப்ட் நிறுவனம் பங்களித்துள்ள விதம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று மைக்றோசொப்ட் நிறுவனத்தின் ஆசிய பசிபிக் வலய பணிப்பாளர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவொன்றுடன் சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் கௌரவ அமைச்சர் சாகல இரத்னாயக்க அவர்களின் தலைமையில் அமைச்சுச் செயலாளரின் பங்களிப்போடும் இலங்கை பொலிசின் உயர் அதிகாரிகளின் பங்களிப்போடும் அலரி மாளிகையில் இடம்பெற்றது.



## 2.4. தென் பிராந்தியத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கை அண்மிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து

- தென் பிராந்தியத்தை கவர்ச்சிகரமான சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்வது தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்று கௌரவ பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் 2016.02.19ம் திகதி மாத்தறை மாவட்ட பொதுச் செயலாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.



- தெற்கு பிரதேசத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கௌர பிரதமரின் தலைமையில் 2016.07.15ம் திகதி அம்பாந்தோட்டை துறைமுக வளாகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இங்கு தெற்கு பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.



## 2.5. இலங்கைக்கான சர்வதேச ஒத்துழைப்பு

- பாகிஸ்தானில் இஸ்லாமாபாத் நகரில் நடத்தப்பட்ட சார்க், உள்ளக மற்றும் சுதேச அமைச்சர்களின் அமர்வுக்காக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சாகல இரத்னாயக்க அவர்கள் கலந்துகொண்ட போது.



- இலங்கைக்கான இரஷ்ய தூதுவர் அலரிமாளிகையில் சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் திரு. சாகல இரத்னாயக்க அவர்களைச் சந்தித்து இருநாட்டுக்குமுரிய சில முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடிய சந்தா



- சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் திரு. சாகல இரத்னாயக்க அவர்கள் அமெரிக்க உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளரைச் சந்தித்து இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அமெரிக்க உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.



- 2016.04.20ம் திகதி நியுயோர்க் நகரில் இடம்பெற்ற உலக போதைப்பொருள் பிரச்சனை தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட பொதுச் சபையின் அமர்வில் கலந்துந்கொண்டு உரை நிகழ்த்திய கௌரவ சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌர திரு. சாகல இரத்னாயக்க அவர்கள் இலங்கை போதைப் பொருள் விற்பனையை ஒழிப்பதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளை விளக்கியதோடு அதற்கான சர்வதேச ஒத்துழைப்பையும் பரிமாற்றிக் கொள்ளுதல் பற்றியும் விளக்கினார்.



அங்கு போதைப்பொருள் வர்த்தகத்தை அழிப்பதற்குரிய பிராந்திய ரீதியான ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்வதற்காக அப்கானிஸ்தான் மற்றும் சிங்கப்பூரின் உரிய விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்களுடன் கௌரவ அமைச்சர் கலந்துரையாடினார்.



- சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் திரு. சாகல இரத்னாயக்க அவர்கள் கௌரவ பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிய அவர்களின் தலைமையில் நியுசிலாந்தில் மூன்றுநாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டதுடன் அங்கு இலங்கை பொலிஸ் செயற்றின் மற்றும் மிக நெருங்கிய சேவையொன்றை வழங்குவதற்கு நியூசிலாந்தின் விதிமுறைகளைப் பாவிப்பது தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்டதுடன் வெலிங்டன் நகரில் அமைந்துள்ள பொலிஸ் கட்டளைகள் தலைமையக அவதானிப்பிலும்இணைந்து கொண்டார்.



- கௌரவ பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தலைமையிலான தூதுக் குழுவொன்றுடன் பெல்ஜியத்தின் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்ட சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ திரு. சாகல இரத்னாயக்க அவர்கள் இலங்கைக்கு முக்கிய, பொருளாதார, அரசியல் மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான தீர்மானங்களை எடுத்தலுக்கான கலந்துரையாடல்களில் இணைந்து கொண்டார்.



- 2016.10.24ம் திகதி மற்றும் ஆசிய மற்றும் பசுபிக் வலய போதைப் பொருள் தொடர்பான தேசிய நிறுவனங்களின் தலைவர்களின் 40வது மாநாடு கொழும்பில் நடத்தப்பட இருந்ததுடன் அதற்காக சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சாகல இரத்னாயக்க அவர்கள் கலந்துகொண்ட சந்தர்ப்பம்.






- 2016.10.29ம் திகதி சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சாகல இரத்னாயக்க அவர்களின் தலைமையில் போதைப் பொருள் நிவாரணம் தொடர்பான இந்து சமுத்திர வலய நாடுகளின் உள்ளக அலுவல்கள் அமைச்சர்களின் உயர்மட்ட அமர்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவிருந்தது.

## 2.6. அமைச்சினதும் அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்களின் முன்னேற்றத்தை எதிர்பார்த்து

### 2.6.1. நிறுவனங்களின் கருமங்களை ஒழுங்குபடுத்துவதற்காக

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள அனைத்து நிறுவனங்களினதும் விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்காக 2016.11.24 மற்றும் 2016.11.25 ஆகிய இரு தினங்களில் களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் நிறுவன செயற்பாடுகள் தொடர்பான பயிற்சி நெறியொன்று இடம்பெற்றது. இதில் 65 உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். பயிற்சி நெறி அமைச்சின் உள்ளகத் தலைமைக் கணக்காய்வாளரால் வழிநடத்தப்பட்டது.

### 2.6.2. முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்படல்

மீளாய்வு ஆண்டுக்குள், அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களை இணைத்துக் கொண்டு முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டு ரீதியான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதனூடாக நிறுவனங்களில் அவற்றுக்கேயுரிய பிரச்சனைகளை இனங்காணவும் அவற்றுக்குத் தேவையான உடனடித் தீர்வுகளைத் தேடுவதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அதற்கேற்ப எதிர்காலத் திட்டங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான படிமுறைகளை எடுக்கும் ஆற்றல் கிடைத்தது.



முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமொன்று

### 2.6.3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல்.

2016ம் ஆண்டின் கணக்காய்வுத் திட்டத்துக்கு ஏற்ப, முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளுக்காக அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டங்கள் இடம்பெற்றதுடன் இலங்கை பொலிஸ் தொடர்பில் 2016.06.22ம் திகதி இடம்பெற்ற இலங்கை பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவிடம் சமர்ப்பிக்கப்படுவதற்காக பதில் அறிகைகள் தயாரித்தல் மற்றும் அந்நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கப்பட்டன



## 2.7. அமைச்சுகளுக்கிடையே ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளுக்கு தோள்கொடுத்து

- 2015 04ம் இலக்க குற்றமொன்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மற்றும் சாட்சியாளர்களுக்கு உதவி வழங்குதல் மற்றும் பாதுகாக்கும் சட்டத்தின் சட்டரீதியான ஒதுக்கங்களுக்கு ஏற்ப குற்றமொன்றினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபையின் நிர்வாக சபை உறுப்பினராக அமைச்சின் மேலதிக செயலாளரை (நிருவாகம்) பிரதிநிதித்துவப்படுத்தல்

- அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி மேலதிக செயலாளர் (நிருவாகம்) சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அமைப்பின் நிதிப் பங்களிப்பின் கீழ் செயற்படும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட சர்வதேச தரங்களுக்கு அமையாதவாறு சிறைச்சாலை தடுத்து வைத்திருக்கப்படும் பெண்களின் அளவு கடக்கப்பட்டு மிகையாவதைக் குறைப்பது தொடர்பிலான தரப்பினர் கலந்துகொள்ளும் குழுவின் உறுப்பினராக செயற்படல்.

- தேசிய போக்குவரத்து கொள்கையை இற்றைப்படுத்தல் ஆகிய என்ற தலைப்பில் இலங்கை பாராளுமன்றத்தில் இடம்பெறும் பிரிவுரீதியான கண்காணிப்பு இணைக்குழுக்களின் உறுப்பினராக தேசிய போக்குவரத்துக் கொள்கையை இற்றைப்படுத்துவதற்காக அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தல்.

- சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் நெறியாளப்படும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தராக தொடர்ச்சியாக பங்களிப்பை வழங்குதல்.

- மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுடன் இணைத் தலைமைத்துவம் வகிக்கும் ஐரோப்பிய சங்கத்தின் கீழ் வரும் 'சுவிச் ஏசியா' திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படும் 'இலங்கையின் நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்திக்காக தேசிய கொள்கையொன்றை வகுப்பதற்கு உதவி வழங்குதல்' என்ற நிகழ்ச்சித்திட்டம் ஊடாக 'பசுமைக் கிராமங்கள்' எண்ணக்கருவின் முக்கியத்துவத்தை நாட்டுக்கு அறிமுகப்படுத்தும் பணியில் இவ் அமைச்சின் குழு உறுப்பினராக பணிப்பாளர் திட்டமிடல் அலுவல்களைச் செய்வார். அதன் மூன்றாவது குழுக் கூட்டத்தில் சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை பொலிஸ் போன்ற கிராமிய மட்டத்தில் பாரிய பணியை நிறைவேற்றும் உத்தியோகத்தர்கள் குழுக்களுக்கும் அறிவூட்டல் நிகழ்ச்சிகளைச் செயற்படுத்தும் ஏற்புடைமையை தெளிவுபடுத்தும் ஸ்விச் ஏசியா திட்டத்தின் நிபுணர்களால் அது மிகவும் முக்கிய கேந்திரப் புள்ளியாகக் கருதப்பட்டு 2017ம் ஆண்டில் அறிவூட்டும் நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்கு இயலுமானவாறு செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.




- உப பொலிஸ் பரீட்சகர் பதவி மற்றும் அதற்குக் கீழுள்ள வகுப்புகளில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பதவியுயர்வுகள் தொடர்பான துயரங்களைக் இனங்கண்டு உரிய பரிந்துரைகளை முன்வைக்கும் குழுவுக்காக அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி சிரேஷ்ட உதவிச் செயலாளர் (பொலிஸ்) கலந்துகொண்டதுடன் அது தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் தேர்வளவு அறிக்கையொன்று குழுவினால் முன்வைக்கப்பட்டது.

- வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் இடம்பெற்ற மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான நெறியாள்கைக் குழு உறுப்பினராக சிரேஷ்ட உதவிச் செயலாளர் (பொலிஸ்) கலந்துகொண்டு அதற்கான பங்களிப்பினை வழங்கினார்.


- எதிர்கால பொலிஸ்மயமாக்கம் - தெற்காசிய வலயத்தின் எதிர்கால எதிர்பார்ப்புகள் மற்றும் சவால்கள் மாநாட்டுக்கு உரிய நெறியாள்கைக் குழுவின் உறுப்பினராக சிரேஷ்ட உதவிச் செயலாளர் (பொலலிஸ்) கருமமாற்றினார்.

- மோட்டார் சைக்கிள் பதிவிற்காக இப்போது அனுமதியிலுள்ள சிலிண்டர் கொள்ளளவு 450 சீ.சீ எல்லையைத் தாண்டிய எஞ்சின் கொள்ளளவைக் கொண்ட மோட்டார் சைக்கிள் பாவனை காரணமாக நிகழ்காலத்தில் வேகமாக அதிகரித்துவரும் மோட்டார் சைக்கிள் விபத்துகள் தொடர்பிலும் மோட்டார் சைக்கிள் செலுத்துனர்கள் முற்றாக முகத்தை மூடிய ஹெல்மட் பாவனையை மேலும் முன்னெடுப்பது தொடர்பில் காணப்படும் சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் தரங்களைப் பரீட்சித்துப் பார்த்து வைத்திருத்தல் அல்லது திருத்தங்களை முன்வைப்பதற்கான இணைச் செயற்குழு சிரேஷ்ட உதவிச் செயலாளரை (அபிவிருத்தி) பிரதிநிதித்துவப்படுத்தல்.

- மேல்மாகாண வலய மாநகரத்தில் விரிவான முகாமைத்துவத் திட்டத்தின் கீழான முன்மொழிவுகளை செயற்படுத்துவதன் கீழ், நெகிழ்வுத் தன்மையான மற்றும் பரந்துள்ள அலுவலக நேரங்களை அறிமுகப்படுத்தும் சாத்திய ஆய்வொன்றை மேற்கொள்ளல், கொழும்பு நகரத்தில் வாகனங்களைத் தரித்து வைப்பதற்கான நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இனங்காணப்பட்ட இடங்களை ஒதுக்கிக் கொள்ளுதல், இலங்கை பொலிசால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட எதிர்பார்க்கப்படும் கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்துவதற்குத் தேவையான ஒதுக்கங்களை ஏற்படுத்திக் கொடுத்தல், பாடசாலை பஸ்வண்டிப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் தூரப் பயண பஸ் வண்டிகள் சேவையை செயற்றிறனாக்குதல் போன்றன தொடர்பில் திட்டங்களை வகுக்கும் செயற்பாட்டுக்காக சிரேஷ்ட உதவிச் செயலாளர் (அபிவிருத்தி) இணைந்து கொள்ளல்.

## 2.8. கண்காணிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களில் செயல் நிறைவேற்றுகை

- பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்களின் தங்குமிட வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளை நிறைவேற்றுவதற்காக பொறியியல் ரீதியான செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை செயற்பிரிவின் கண்காணிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பெரசவி வீடமைப்புத் திட்டம் மூலம் 2016ம் ஆண்டில் இலங்கை பொலிசின் 113 கட்டிடங்கள் மற்றும் விசேட அதிரடிப் படையின் 23 கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கேற்ப மொத்த திட்டத்தின் மூலம் இலங்கை பொலிசின் மற்றும் விசேட அதிரடிப் படையின் கட்டிடங்கள் முறையே 454 கட்டிடங்கள் மற்றும் 153 கட்டிடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. 2016ம் ஆண்டு முடிவடையும் போது இலங்கை பொலிசில் அமைக்கப்பட்டுக்கொண்டிருந்த கட்டிடங்களின் எண்ணிக்கை 83ஆக இருந்ததுடன் விசேட அதிரடிப்படையில் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த கட்டிடங்களின் எண்ணிக்கை15 ஆகும். 2016 ஒதுக்கங்கள் ஊடாக இலங்கை பொலிஸ் 259 மில்லியன் ரூபாவையும் விசேட அதிரடிப் படையினர் 159.49 மில்லியன் ரூபாவையும் செலவிட்டுள்ளது.

*அமைக்கப்பட்ட பெரசவி வீடுகளின் காட்சி*

- பொலிஸ் உத்தியோகத்தர்களை தொழில் ரீதியாக அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உயர்த்துவதற்காக கட்டான பொலிஸ் பயிற்சிக் கல்லாரி மற்றும் களுத்துறை பொலிஸ் கல்லூரியின் அபிவிருத்திக்காக 2016 ஒதுக்கங்கள் மூலம் 44 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

- அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இலங்கை பொலிசின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 1,047.20 ரூபா மில்லியன் செலவிடப்பட்டு புதிய பொலிஸ் கட்டிடமொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. கட்டிடங்களுக்கிடையே வெலிபன்ன, ஒட்டுசுட்டான் ஆகிய பொலிஸ் நிலையங்கள், பின்னவல, மொனராகல ஆகிய புதிய பொலிஸ் நிலையங்கள் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமையகம் ஆகிய கட்டிடங்களாகும்.

- விசேட அதிரடிப் படையில் காணப்படும் கட்டிடப் பிரச்சனைக்குத் தீர்வு வழங்கி 125.02 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு 16 கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கிடையே கட்டுக்குருந்த முகாமில் தோட்டா களஞ்சியசாலையை அமைத்தல், புத்தள முகாம், 18ம் கட்டை முகாம் (மஹஓய), அரலகங்வில முகாம், கட்டுக்குருந்த முகாம், அப்புத்தளை முகாம், யாழ்ப்பாண முகாம், திருகோணமலை முகாம், கந்தளாய் முகாம், தம்புள்ள முகாம், மஸ்கெலியா முகாம், கம்பளை முகாம், கேகாலை முகாம், உடவளவை முகாம், பூகொடை முகாம், ரத்கல்ல முகாம் ஆகிய முகாம்களில் மலசலகூடத் தொகுதிகள் அமைத்தல் என்பன அமையும்..



*அமைக்கப்பட்ட கட்டுக்குருந்த (முகாமின் தோட்டாக் களஞ்சியசாலை*

- 2016 வரவுசெலவுத் திட்ட உரையின் மூலம் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு ஏற்ப பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கையை 600 வரை உயர்த்துவதற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கங்களைப் பயன்படுத்தி பொலிஸ் நிலையங்களை விருத்தி செய்வதற்காக 149 மில்லியன் ரூபா ஆண்டுக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- இலங்கை பொலிசின் தேசிய பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் பயிற்சிப் பாடநெறிகளை நவீனமயப்படுத்தி பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக தரம்வாய்ந்த மற்றும் பயனுள்ளதுமான பயிற்சியொன்றை வழங்குவதற்காக தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட ஒதுக்கங்கள் 34.9மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

- 2016 வரவுசெலவுத் திட்டத்தின் மூல் இலங்கை பொலிசின் வலையமைக்கப்பட்ட தொலைத்தொடர்பு விதிமுறைகளை அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கங்களைப் பாவித்து 92.11 மில்லியன் ரூபா செலவு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- 2016ம் ஆண்டில் தெற்குப் பிரதேச அபிவிருத்திக்கென 2015 வரவுசெலவுத் திட்ட உரையில் ஒதுக்கப்பட்ட 1,000 மில்லியன் ரூபாவிற்கான ஒதுக்கத்தைப் பயன்படுத்தி காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட 689 திட்டங்களின் முன்னேற்றம் கீழ்வரும் அட்டவணை 10ல் மூலம் காட்டப்பட்டுள்ளது.





**தெற்குப் பிரதேச அபிவிருத்தித் திட்ட முன்னேற்றம்**

**புள்ளிவிபர அட்டவணை – 10**

| மாவட்டம் | ஒதுக்கப்பட்ட ஒதுக்கம் (ரூ.மி) | அனுமதிக்கப் பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | நிதி முன்னேற்றம் (ரூ.மி) | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | வேலைகள் பூர்த்தி செய்யப்படாத திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| காலி | 84.89 | 86 | 44.05 | 66 | - |
| மாத்தறை | 605.29 | 519 | 346.47 | 347 | 13 |
| அம்பாந்தோட்டை | 140.12 | 84 | 92.63 | 83 | - |
| மொத்தம் | 830.30 | 689 | 483.15 | 496 | 13 |

*மூலம்: அமைச்சின திட்டமிடல் பிரிவு*

- **காலி கோட்டையின் மணிக்கூண்டு கோபுரத்தை மறுசீரமைத்தல்**

காலி கோட்டையின் வாஸ்த்து விஞ்ஞான வடிவமைப்புகளுக்கிடையே மிகச் சிறந்த இடத்தைப் பிடித்துள்ள வடிவமைப்பாக மணிக்கூண்டுக் கோபுரத்தைக் குறிப்பிட முடியும். நிலாக்கோட்டை இல்லையேல் மூன் பாஸ்ட்டன் காவல் அரணுக்கு அண்மையில் பின்னொரு காலத்தில் உருவாக்கப்பட்ட வடிவமைப்பான இது பல வருடங்களாக பொலிவிழந்து காணப்பட்டதால் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் 2015ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் இரண்டாம் கட்டமாக வெளிச் சுவர்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கை இந்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்காக காலி பாரம்பரியம் நிலையத்தின் 2016 ஒதுக்கத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள செலவு 6.55 மில்லியன் ரூபாவாகும்.



- **நிலாக் கோட்டையின் யுத்த அறைகளை மறுசீரமைத்தல் (குளிரூட்டப்படல்)**

காலி கோட்டையின் மீது பீரங்கிகள் பொருத்தப்பட்ட காவல் அரண்கள், அரண்கள் எனப்படும் 16 பாஸ்ட்டன்கள் காணப்படுகின்றன. பழைய அரண்களை மறுசீரமைப்பதைப் போன்றே சுற்றுலாப் பயணிகளின் காட்சி மத்திய நிலையங்களாக மேம்படுத்தும் நோக்காகக் கொண்டு இந்த ஆண்டில் அவற்றில் 04 அரண்கள் மறுசீரமைக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதற்கேற்ப, மறுசீரமைக்கப்பட்ட அரண்களை குளிரூட்டுவதும், அரண்களுக்குள் அமைக்கப்பட்ட ஓவியங்கள் மற்றும் சிலைகளின் பெயர்ப் பலகைகளைத் தயாரிப்பதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2016 காலி பாரம்பரிய நிலையத்தின் ஒதுக்கங்களின் அடிப்படையில் 0.86 ரூ.மில்லியன் செலவு ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.





- **‘பௌரக்க உருமய’ புத்தகத்தை அச்சிடல்**

உலகப் பாரம்பரியமான காலிப் பாரம்பரியம் பற்றிய உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட காலிக் கோட்டை தொடர்பில் ஆர்வமுள்ள தரப்பிரனரை அறிவூட்டும் நோக்கில் அவர்களுக்கு விற்பனை செய்வதற்காக காலி கோட்டை பற்றிய புத்தகம் ஒன்று காலி பாரம்பரியம் நிலையத்தால் அச்சிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# 03. பிரிவு ரீதியான செயல் நிறைவேற்றுகை

## 3.1. நிருவாகப் பிரிவு

அமைச்சின் அனைத்து நிறுவன மற்றும் உள்ளக நிருவாக அலுவல்கள் நிருவாகப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

- ஆண்டுக்குள் புள்ளிவிபர அட்டவணை இலக்கம் 11ன்படி அமைச்சுச் செயற்குழுவில் மாற்றங்கள் இடம்பெற்றதுடன் அதற்குரிய மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் நிருவாகப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்பட்டன.

**ஆளணி மாற்றங்கள் - 2016**

**புள்ளிவிபர அட்டவணை - 11**

| தொடர் இலக்கம் | பதவி | சேவை | அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் | இராஜினாமா செய்த உத்தியோகத்தர்கள் | இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மேலதிக செயலாளர் | அ.நி.சே. | 02 | 01 | - | - | 02 |
| 2 | பிரதான நிதி உத்தியோகத்தர் | அ.நி.சே. | 01 | - | 01 | | |
| 3 | பணிப்பாளர் | அ.க.சே. | 01 | - | - | - | 01 |
| 4 | உதவிச் செயலாளர் | அ.நி.சே. | 03 | - | - | - | 01 |
| 5 | நிருவாக உத்தியோகத்தர் | அ.நி.சே. | 01 | - | - | - | 01 |
| 6 | மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்-ஆங்கிலம்) | மொ.பெ.சே | 01 | - | - | - | 01 |
| 7 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | அ.உ.சே. | 24 | 01 | | | |
| 8 | அரச முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே. | 40 | 03 | - | - | 01 |
| 9 | சாரதி | சா. சே. | 15 | 02 | - | - | 03 |
| 10 | அலுவலக உதவியாளர் | கா. உ. சே | 18 | 01 | - | - | 02 |

*மூலம்: அமைச்சின் நிருவாகப் பிரிவு*

- ஆளணி அறிவு, தொழில்நுட்ப ஆற்றல் மற்றும் மொழித் தேர்ச்சியை வளர்ப்பதை நோக்காகக் கொண்டு 23 உள்நாட்டு பயிற்சி நெறிகளுக்காக 2016ம் ஆண்டில் 255 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

**உள்நாட்டுப் பயிற்சிகள்**

புள்ளிவிபர அட்டவணை - 12

| பயிற்சி நெறி | ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| திறன் விருத்தி நிதியத்தின் மூலம் நடத்தப்பட்ட செயலமர்வு மற்றும் பயிற்சி நெறிகள் - சரியான எண்ணக்கருக்களை வளர்ப்பதன் மூலமான செயலூக்கம் | 04 |
| பேச்சுப் பயிற்சி ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி | 01 |
| உயர் ஊழியர் பயன்பாட்டுக்காக காரியாலய உதவியாளர் பணிப்பொறுப்பு | 08 |
| திட்டம் வகுத்தல், செயற்படுத்தல் மற்றும் கண்காணிப்புக்கான பொருத்தமான பயன்பாடுகள் | 01 |
| அலுவலக நிருவாகம் மற்றும் கண்காணிப்பு | 02 |
| இலங்கை பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் தேசிய மாநாடு மற்றும் பயிற்சிச் செயலமர்வு | 04 |
| மனித உரிமைகள் முகாமையாளர்களுக்கு இருந்தே ஆகவேண்டிய திறன்கள் | 01 |
| தாபனக் கோவையின் ஏற்பாடுகள் தொடர்பான அரச முகாமைத்துவ உதவிச் சேவையின் உத்தியோகத்தர்களை அறிவூட்டும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 02 |
| அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலுவலக விதிமுறைகள் | 09 |
| மனித வள முகாமைத்துவ டிப்ளோமா | 01 |
| சம்பள முகாமைத்துவம் மற்றும் சம்பளப் பரிவர்த்தனை | 07 |
| மாசு உமிழ்வுத் தரங்களைப் பேணிச் செல்வது தொடர்பான அரச நிறுவனங்களுடன் தொடர்புடைய போக்குவரத்து உத்தியோகத்தர்களை அறிவூட்டல் | 01 |
| பிரச்சனைகளைத் தீர்த்தல் மற்றும் தீர்மானங்களை எடுத்தல் | 02 |
| அரச பெறுகைக் கோரல் மற்றும் ஒப்பந்தங்கள் நிருவாகம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி | 02 |
| தனிப்பட்ட ஆவணக் கோப்பொன்றை பயனுள்ளவாறு பேணிச் செல்லுதல் | 02 |
| கணக்கியல் பணிப்பொறுப்பு | 03 |
| சம்பவ முகாமைத்துவம் | 02 |
| தரம்வாய்ந்த பணிச்சூழலுக்கான அலுவலக உதவிச் சேவையாளர் மற்றும் சாரதிகளின் தொழில் ரீதியான விருத்தி | 06 |
| பெறுகைக் கோரல் அலுவல்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 02 |
| தாபனக் கோவையின் ஏற்பாடுகள் தொடர்பான அரச முகாமைத்துவ உதவிச் சேவை உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் | 02 |
| வெளிவாரிச் செயற்பாட்டு விதிகள் பயிற்சி | 48 |
| களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் நிறுவனச் செயற்பாடுகள் | 65 |
| சேவையின் உட்பொருள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 80 |
| **மொத்தம்** | **255** |

*மூலம் - அமைச்சின் நிருவாகப் பிரிவு*

- 2016 ஆண்டில் அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் 07 பேர் வெளிநாட்டுப் பயிற்சிகளிலும் 08 மாநாடுகளிலும் கலந்துகொண்டுள்ளதுடன் அது பற்றிய விபரங்கள் கீழே அட்டவணை இலக்கம் 13ல் காட்டப்பட்டுள்ளது.

**அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு பயிற்சி விபரங்கள்**

புள்ளிவிபர அட்டவணை - 13

| அலுவலரின் பெயர் | பதவி | நாடு | பயிற்சி பாடநெறி/மாநாடு | காலம் |
|---|---|---|---|---|
| திருமதி. விஜிதா செனவிரத்ன | மேலதிக செயலாளர் | தென்கொரியா | பிரதேச அபிவிருத்தி கொள்கை | 03 வாரம் |
| திருமதி. விஜிதா செனவிரத்ன | மேலதிக செயலாளர் | பாகிஸ்தான் | சட்டம், ஒழுங்கு தொடர்பான 07 ஆவது சார்க் மாநாடு | 03 நாட்கள் |
| திரு.நீல் ஹப்புஹின்ன | மேலதிக செயலாளர் | ஹவாய் | நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு பாடநெறி | 05 நாட்கள் |
| திரு நிசாந்த வீரசிங்க | சிரேஸ்ட உதவி செயலாளர் | சீனா/தாய்லாந்து | சீன டொன்கின் மற்றும் தாய்லாந்து ரெயோனட் இன்டஸ்ரியல் பார்க் சுற்றுலா | 06 நாட்கள் |
| திரு.டி.எஸ்.சமரவிக்கிரம | பிரதம உள்ளக கணக்காளர் | தாய்லாந்து | முகாமைத்துவ(கணக்காய்வு) சர்வதேச கருத்தரங்கு, ஹஸட்யாட் பல்கலைக்கழகம் | 08 நாட்கள் |
| திருமதி. எல்.எஸ்.குணசேகர | உதவி செயலாளர் | சீனா | அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் முக்கிய சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி பாடநெறி | 14 நாட்கள் |
| திரு.ஓசத குணதிலக்க | உதவி செயலாளர் | மியன்மார் | போதைப்பொருள் மற்றும் நச்சு இரசாயனங்களை அனுமதியின்றி கொண்டுசெல்லுதலைத் தடுத்தல் தொடர்பான பிம்ஸ்ரெக் துணைக்குழுக் கூட்டம் | 02 நாட்கள் |
| திரு. வீ. கே. எச். கோலித்த | பிரதான கணக்காய்வாளர் | தாய்லாந்து | முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச செயலமர்வு, கென்சர்ட் பல்கலைக்கழகம் | 07 நாட்கள் |

*மூலம் - நிருவாகப் பிரிவு*

- நிறுவன மற்றும் நிர்வாக அலுவல்களுக்குரிய அமைச்சரவை கூற்றுக்கள் 12 அமைச்சரவையிடம் முன்வைக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் தொடர்பில் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

- அமைச்சரவை அனுமதியின் மூலம் இவ் அமைச்சுக்காக தனிப்பட்ட ஆளுமைக்கான பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடத்தின் (சுஹுருபாய) 14வது மாடியைப் பெற்றுக் கொண்டு அமைச்சினை அவ்விடத்தில் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- 2015ம் ஆண்டை விட 2016ம் ஆண்டளவில் அமைச்சின் வாகன அளவை உயர்த்திக் கொள்ள முடிந்துள்ளது. அதற்காக இந்த ஆண்டுக்குள் அமைச்சிடம் 04 வாகனங்களை புதிதாக எடுத்துள்ளதுடன் 04 வாகனங்களைக் கையகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

- அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்களில் நிறுவன மற்றும் நிருவாக ரீதியான செயற்பாடுகள் தொடர்பில் பங்களிப்புச் செய்தல்.

  - இலங்கை பொலிசின் சிவில் பணிக்குழு மற்றும் 737 உதவிச் சேவைகள் பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

  - தனியான நிருவாக அதிகாரசபை என்ற ரீதியில் செயலாற்றும் முன்னோடி நிருவாக அதிகாரசபை அபாயகரமான ஔடதக் கட்டுப்பாட்டு தேசிய சபையிடம் உள்ளடக்கப்படல்.

  - அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபைக்காக 2016ம் ஆண்டில் புதிய பதவிகளை ஏற்படுத்துவதற்குத் தேவையான அனுமதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கேற்ப அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை 339 வரை உயர்த்த முடிந்துள்ளது.

  - தெற்கு அபிவிருத்தி அலுவல்களை வெற்றிகரமாக்கிக் கொள்ளும் நோக்கில் அமைச்சரவை அனுமதியின் கீழ் தெற்கு அபிவிருத்தி இடைக்காலச் சபையை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.

- அமைச்சின் அலுவல்களை செயற்திறனாகவும் மக்களுக்குச் சாதகமான இடமாக பேணிச் செல்வதை நோக்காகக் கொண்டு அமைச்சுக்குத் தேவையான அலுவலக உபகரணங்கள் மற்றும் மரத் தளபாடக் கொள்வனவு தொடர்பான கடமை அலுவல்களும், அலுவலகச் சூழலை தூய்மையாக்கல் மற்றும் சிறந்த முறையில் நடாத்திச் செல்வதும், நீர் கட்டணச் சீட்டு, மின்சாரக் கட்டணச் சீட்டு மற்றும் அலுவலகக் கூலியை சீராக்கல் தொடர்பான அலுவல்களும் கணினி ரீதியான புகைப்படப் பிரதி இயந்திரங்கள், அச்சு இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், வாகனங்கள் போன்றவற்றைப் புதுப்பித்தல் மற்றும் சேவை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

## 3.2. பொலிஸ் பிரிவு

- அமைச்சினால் அனுமதியளிக்கப்பட்ட அதிகார எல்லைக்குட்பட்ட விசேட அதிரடிப் படையின் மற்றும் இலங்கை பொலிசின் பதவிகளுக்கு உயர்வு வழங்கப்படுவதன் கீழ் இலங்கை பொலிசின் பிரதான பொலிஸ் பரிசோதகர் பதவியிலிருந்து உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கு 05 பேருக்கும் உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர் பதவியிலிருந்து பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கு 71 பேரையும் பொலிஸ் உத்தியோகத்தர் பதவியிலிருந்து சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கு 25பேருக்கும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பதவியிலிருந்து பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு 10 உத்தியோகத்தர்களுக்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் பதவிக்கு 06 உத்தியோகத்தர்களுக்கும் விசேட அதிரடிப் படையின் உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர் பதவியிலிருந்து பொலிஸ் அதிகாரி பதவிக்கு 14 உத்தியோகத்தர்களுக்கும் பதவியுயர்வுகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் பதில்கடமையாற்றும் உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 57 பேர் மற்றும் இறந்துபோன பதில் கடமையாற்று உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 03 பேரை உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பதவியில் நிரந்தரப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- அமைச்சின் அனுமதிக்கப்பட்ட அதிகார எல்லைகளுக்குரிய விசேட அதிரடிப் படையின் மற்றும் இலங்கை பொலிசின் உத்தியோகத்தர்களை ஓய்வெடுக்கச் செய்வதற்கு உரிய உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 06 பேருக்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் 06 பேருக்கு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் 10 பேருக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் 09 பேருக்கு சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்கள் 02 பேருக்கு ஓய்வுபெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- இலங்கை பொலிசின் பொலிஸ் உத்தியோகத்தர் பதவியிலிருந்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவி வரை ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல், பொலிஸ் உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பிலான கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல், பதவியுயர்வுகள் முன்தேதியிடப்படல் மற்றும் அதற்கு ஏற்புடைய மேன்முறையீடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட்டது.

- இலங்கை பொலிசின் சேவை வகை 02க்குரிய 06 பதவிகள் திருத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கான ஏற்பாடுகள் மற்றும் பொலிஸ் வைத்திய பிரிவுக்கு ஏற்புடைய 11 பதவிகளுக்கான ஆட்களைச் சேர்க்கும் மற்றும் பதவியுயர்த்தும் ஏற்பாடுகளுக்கான அனுமதிக்காக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தல்.

- பொலிஸ் பாவனையின் மூலம் கொடூர அமானுஷ்ய சித்திரவதைகள் மற்றும் அவமானங்களுடன் கூடிய கவனிப்புக்கு ஆளாவதை ஒழிப்பதை நோக்காகக் கொண்டு அமைச்சின் செயலாளரின் கலந்துகொள்ளலுடன் களநிலையின் புகழ்பெற்றவர்களுடன் கூடிய குழுவொன்றை அமைத்து மாதமொருமுறை கூடி அமானுஷ்ய பொலிஸ் பாவனைகளைக் குறைப்பது தொடர்பில் ஆலோசனைகளை முன்வைத்து செயற்படுத்தப்படும். இவ்வாண்டின் டிசம்பர் மாதத்தில் இதன் கீழ் தொழில் ரீதியான குற்றங்களை விசாரிக்கும் தேவையை வலியுறுத்தி பிரிவுகள் சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்காக செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

- இலங்கை பொலிசினதும் விசேட அதிரடிப் படையின் 363 உத்தியோகத்தர்களுக்காக வெளிநாட்டுப் பயிற்சிகளும் கருத்தரங்குகளிலும் கலந்துகொள்வதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளான உத்தியோகத்தர்களுக்கு நிவாரணமளித்தல் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கான மூவர் அடங்கிய குழு முன்னிலையில் 379 உத்தியோகத்தர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, அதிலிருந்து 129 பேர் அரசியல் ரீதியான அநியாயங்களுக்கு ஆளானதாகப் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. அந் 129 உத்தியோகத்தர்கள் தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்று அப்பரிந்துரைகளுக்கு ஏற்ப, நிவாரணம் வழங்குவதற்காக 67 உத்தியோகத்தர்களுக்கு உரிய நடவடிக்கைக ள

மற்கொள்வதற்கு பொலிஸ் ஆணைக்குழுவிடமும் 62 உத்தியோகத்தர்களுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிஸ்மா அதிபரிடமும் சமா்ப்பிக்கப்பட்டுள்ளைது.

- இலங்கை பொலிசுக்கு பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுதல் மற்றும் மக்கள் நட்புறவுடன் செயற்றிறன் மிக்க பொலிஸ் சேவையை தாபிப்பதற்காக பொலிஸ் மீள ஒருங்கிணைப்புக்கு உரிய நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.

- பொலிஸ் வைத்தியசாலையில் தாதிச் சகோதரி பதவிகளுக்கும் பணியாளா்/பணிப்பெண்களுக்கான சீருடைகளை வழங்குவதற்கு அனுமதியை வழங்குதல் மற்றும் நிதிக் குற்றப் பிரிவின் அனைத்து உத்தியோகத்தர்களுக்காகவும் சிவில் உடையணிந்து கடமையில் ஈடுபட அனுமதியளித்தல்.

- ஐக்கிய நாடுகளின் அமைதிப்படைய கடமைகளுக்காக ஹைட்டி இராச்சியத்திடம் உத்தியோகத்தர்கள் இருவா், தென் சூடானுக்காக 17 உத்தியோகத்தர்கள் மற்றும் டாஃபூருக்கு 17 உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

- பொலிஸ் திறன்கள் பதக்கத்தை வழங்குவதற்காக புதிய புள்ளி வழங்கும் ஏற்பாடொன்று அனுமதிக்காக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் சமா்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 1,870 பேருக்கு பூா்ண பூமி விருது, 45 உத்தியோகத்தர்களுக்கு தேசபுத்ர விருது, 15 உத்தியோகத்தர்களுக்கு பொலிஸ் பேராண்மைப் பதக்கம், 581 உத்தியோகத்தர்களுக்கு பொலிஸ் விசேட சேவைகள் பதக்கத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

- பொலிஸ் பாதுகாப்பு, முக்கிய பிரமுகா்களின் முன் பயணிக்கும் பாதுகாப்பு வாகனங்களுக்கான கோரிக்கைகள் தொடா்பில் நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அமைச்சரவையின் 23 குறிப்புகளைத் தயாரித்து கௌரவ அமைச்சரின் கையெழுத்துடன் அமைச்சரவையிடம் சமா்ப்பித்தல் மற்றும் அதற்குரிய வழங்கப்பட்ட தீா்வுகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல்.

- அமைச்சரவை மூலம் கௌரவ அமைச்சரின் கண்காணிப்புக்காக ஈடுபடுத்தப்படும் ஏனைய அமைச்சுகளில் அமைச்சரவை 14 குறிப்புகளுக்கான கௌரவ அமைச்சரின் கண்காணிப்பு அறிக்கைகள் அமைச்சரவைக் குழுவிடம் சமா்ப்பிக்கப்படல்.

- சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிச் செல்வதற்காக இலங்கை பொலிசின் பணிப்பொறுப்புகளை செயற்றிறனுடன் பயனுள்ளதாக்குவதற்கு ஈரான், துருக்கி, கட்டாா் இராச்சியம், வியட்நாம், தஜிகிஸ்தான் ஆகிய நாடுகள் மற்றும் சா்வதேச கிரிக்கட் கவுன்சிலுடன் புரிந்துணா்வு ஒப்பந்தங்களுக்கு முன்வருவதற்குத் தேவையான ஆலோசனைகளை முன்வைத்தல் மற்றும் உரிய நடவடிக்கைகளைச் செயற்படுத்தல்.

- மீளாய்வு ஆண்டில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினா்களால் பாராளுமன்றம் தள்ளி வைக்கப்படும் சந்தா்ப்பங்களில் கேட்கப்படும் கேள்விகள் தொடா்பில் பதில் அறிக்கைகள் 35ம் நிலையான கட்டளைகள் 23/2ன் கீழ் 15 கேள்விகளுக்கும் பதில்களை முன்வைத்தல் மற்றும் பாராளுமன்ற பிரிவு ரீதியான கண்காணிப்புச் செயற்குழு, பாராளுமன்ற மக்கள முறைப்பாட்டுச் செயற்குழு, நிருவாக அலுவல்கள் தொடா்பான பாராளுமன்ற ஆணையாளா் (ஒம்புட்ஸ்மன்) ஆகிய நிறுவனங்களால் கோரப்பட்ட பரிந்துரை அறிக்கைகளை வழங்கும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- அணுவாயுத வா்த்தகம் தொடா்பில் ஆறாவது சா்வதேச பொலிஸ் செயலமா்வு இணை ஒருங்கிணைப்பு 2016 ஜூலை 4-6 மற்றும் மனித வா்த்தகம் பற்றிய ஒன்றிணைந்த முகாமைத்துவக் குழுக்கள் கருத்தரங்கு 2016 மாா்ச் 8-9 ஆகிய கருத்தரங்கு ஏற்பாட்டுக்கான அனுமதியை வழங்குதல் மற்றும் பயங்கரவாதத்தை நோ்மறை ரீதியாக ஒழிப்பது தொடா்பான தெற்காசிய அங்கத்துவ நாடுகளின் நீதிபதிகள், அரசாங்க வழக்கறிஞா்கள் மற்றும் பொலிஸ்

உத்தியோகத்தர்களுக்கான பதினோறாவது வலயரீதியான செயலமர்வு 2016 அக்டேர்பர் 3-5, போதைப்பொருள் நிவாரணம் தொடர்பான இந்து சமுத்திர பிராந்திய நாடுகளில் உள்ளக அலுவல்கள் அமைச்சர்களின் உயர்மட்ட அமர்வு 2016 அக்டேர்பர் 28-29, ஆசிய மற்றும் பசுபிக் வலய போதைப் பொருள் தொடர்பான தேசிய நிறுவனங்களின் பிரதானிகளின் 40வது மாநாடு 2016-அக்டோபர் 24-27 மற்றும் 2016 நவம்பர் 3-6 வரை வியட்நாமில் கௌரவ அரச பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை சுற்றுப்பயணம் ஆகிய மாநாடுகள் மற்றும் சுற்றுப்பயண ஏற்பாட்டுக்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல்.





**வியட்நாமின் கௌரவ அரச பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை சுற்றுப் பயணத்தின் சந்தர்ப்பங்கள்.**

- மற்றும் 05 பல்வேறு மாநாடுகளுக்காக விண்ணப்பிக்கப்பட்ட அவதானிப்புகள் உள்ளடங்கி 05 அறிக்கைகளைத் தயாரித்து முன்வைத்தல்.

# 3.3. நிதிப் பிரிவு

## 3.3.1. நிதி ஒதுக்கங்கள் மற்றும் ஈட்டல்கள்

- 2015ம் ஆண்டின் நிதி ஒதுக்கங்களை பயனுள்ளவாறு முகாமைத்துவப்படுத்தப்பட்டதோடு அதற்கேற்ப, அமைச்சு நிதி முன்னேற்ற மொத்த ஒதுக்கத்தின் 85% மாகும். (மீண்டெழுதல் செலவு 94%, மூலதனச் செலவு 51%). தேசிய வரவுசெலவுத் திட்டம் திணைக்களத்தினால் 2016 மூலதன மற்றும் மீண்டெழுதல் செலவுக்காக ரூ. 9,438,112.000 பணம் ஒதுக்கப்பட்டுள்ளதோடு, 8,048,459,946 ரூபா செலவு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.


  மொத்த ஒதுக்கம் மற்றும் மொத்த செலவு மூலதன மற்றும் மீளெழுச்சிகளாக பிரிந்து காணப்படும் விதத்தில் கீழ்வருமாறு அமையும்.

**நிதி ஒதுக்கம் மற்றும் ஈட்டல் - 2016**

புள்ளிவிபர அட்டவணை – 14

| செலவு வகை | மொத்த ஒதுக்கம் | | மொத்தச் செலவு | | மொத்த ஒதுக்கம் |
|---|---|---|---|---|---|
| | பெறுமானம் (ரூ.) | சதவீதம் | பெறுமானம் (ரூ.) | சதவீதம் | |
| மீண்டெழுல்கள் | 7,466,720,000 | 79% | 7,042,563,911 | 88% | 94% |
| மூலதனம் | 1,971,392,000 | 21% | 1,005,896,035 | 12% | 51% |
| மோத்தம் | **9,438,112,000** | **100%** | **8,048,459,946** | **100%** | |

*மூலம் - அமைச்சு நிதிப் பிரிவு*



**நிதி ஒதுக்கங்கள் மற்றும் ஈட்டல் திட்டங்களுக்கு ஏற்ப விபரமாக – 2016**

புள்ளிவிபர அட்டவணை – 15


ரூ.’000


| திட்டம் | செலவு வகை | மதிப்பிடப்பட்ட ஒதுக்கங்கள் | குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | மொ. மாற்றங்கள் 66 | தேறிய ஒதுக்கம் | மொத்தச் செலவு | செலவு சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| அமைச்சு அலுவலகங்கள் | மீண்டெழல் | 22,050 | | 5,375 | 27,425 | 25,323 | 92% |
| | மூலதனம் | 2,700 | - | - | 2,700 | 1,729 | 64% |
| அமைச்சு நிருவாக மற்றும் நிறுவன சேவைகள் | மீண்டெழல் | 300,600 | 27,300 | 13,625 | 341,525 | 327,727 | 96% |
| | மூலதனம் | 57,000 | 21,300 | 740 | 79,040 | 72,385 | 92% |
| விசேட அதிரடிப் படை | மீண்டெழல் | 6,715,700 | 268,000 | (3,400) | 6,980,300 | 6,640,467 | 95% |
| | மூலதனம் | 1,000,000 | - | (540) | 999,460 | 434,217 | 43% |
| தெற்கு அபிவிருத்தி | மீண்டெழல் | 93,420 | 17,500 | (15,800) | 95,120 | 49,047 | 52% |
| | மூலதனம் | 885,192 | 2,500 | - | 887,692 | 497,565 | 56% |
| அரச அமைச்சர்கள் செயற்குழு | மீண்டெழல் | 22,350 | - | - | 22,350 | - | 0% |
| | மூலதனம் | 2,500 | - | - | 2,500 | - | 0% |
| மொத்தம் | மீண்டெழல் | 7,154,120 | 312,800 | (200) | 7,466,720 | 7,042,564 | 94% |
| | மூலதனம் | 1,947,392 | 23,800 | 200 | 1,971,392 | 1,005,896 | 51% |
| முழு மொத்தம் | | | 336,600 | - | 9,438,312 | 8,048,460 | 85% |


*மூலம்: அமைச்சின் நிதிப் பிரிவு*


அரச அமைச்சுத் திட்டத்திற்கான அச அமைச்சரொருவர் இல்லாததால் செலவுகள் தோன்றவில்லை.

**மொத்த ஒதுக்கம் மற்றும் செலவுத் திட்டங்களுக்கு ஏற்ப**



## 3.3.2. நிதி அலுவல்களை நடத்திச் செல்தல்

- 2017ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் தேசிய வரவுசெலவுத் திணைக்களத்திடம் முன்வைக்கப்படும்போது இந்த அமைச்சின் கீழ் காணப்பட்ட நிறுவனத்தின் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளும் சேகரிக்கப்பட்டு 2016.8.22ம் திகதி அமைச்சு ஆவண இலக்கம் Minlo/ACC/20/16 கீழ் பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலவுத் திட்டத்தை திணைக்களத்திடம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- அரச உத்தியோகத்தர்களின் முற்பணச் செலவுகள் மற்றும் கிடைப்பனவு எல்லைகளை சீராக முகாமைத்துவம் செய்து நடத்தப்பட்டுச் சென்றது. முற்பணங்கள் 'பீ' கணக்கின் ஆரம்ப நிலுவை 2016.01.01ம் திகதிக்கு ரூ. 167,732,709.50 ஆக இருந்ததுடன் அதன் இறுதி நிலுவை 2016.12.31ம் திகதிக்கு ரூ.129,161,105.00 ஆகும்.

**அரச உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் 'பீ' கணக்கு – 2016ம் ஆண்டு**

**புள்ளிவிபர அட்டவணை – 16**

**ரூ. '000**

| விடயம் | செலவின் அதிகூடிய எல்லை | கிடைப்பனவின் குறைந்தபட்ச எல்லை | அதிகபட்ச பற்று நிலுவை |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அதிகாரம் வழங்கப்பட்ட எல்லைகள் | 210,000 | 90,300 | 400,000 |
| ஆண்டிறுதியில் உண்மை மதிப்புகள் | 74,488 | 113,060 | 129,161 |
| மொத்தம் | 284,488 | 203,360 | 529,161 |

**மூலம்: - அமைச்சின் கணக்கியல் பிரிவு**

- பொதுத் திறைசேரியிடம் முன்வைக்கப்பட வேண்டிய கீழ்வரும் அறிக்கைகள் உரிய கால எல்லைகளுக்குள் உரியவாறு சமர்ப்பிக்கப்பட நடவடிக்கை எடுத்தல்.
  - மாதாந்த முற்பணக் கோரிக்கைப் பத்திரம் - ஒவ்வொரு மாதத்திலும் பணியாற்றும் முதலாவது நாட்களில்
  - மாதாந்த கணக்கியல் சாராம்சம் - ஒவ்வொரு மாதத்தினதும் முதல் 02 நாட்களுக்குள்
  - 2015 வருடாந்த கணக்கியல் சாராம்சத்தில் முதலாவது குறைநிரப்பு – 2016ம் வருடத்தின் ஜனவரி 18க்கு முன்னர்
  - 2015 வருடாந்த கணக்கியல் சாராம்சத்தின் இரண்டாம் குறைநிரப்பு – 2016ம் ஆண்டின் ஜனவரி 31க்கு முன்
  - சம்பளங்கள மற்றும் ஊழியர் எண்ணிக்கை தொடர்பான அறிக்கை – ஒவ்வொரு மாதத்திலும் 15க்கு முன்
  - 172 பொது ரசீது தொடர்பான அறிக்கை – ஒவ்வொரு மாதத்திலும் 10க்கு முன்
  - உத்தியோகபூர்வ கணக்குகள் பற்றிய அறிக்கை – ஒவ்வொரு மாதத்திலும் 15ம் திகதிக்கு முன்
  - கட்டுநிதி கணக்குகள் ஒப்பீட்டு அறிக்கை – காலாண்டுக்கு ஒரு முறை
  - 2015 பொது வைப்பு நிலுவைக் கணக்கு அறிக்கை – 2016ம் ஆண்டில் பணியாற்றும் முதல் நாட்களில்
  - 2017 நி.ஒ 135 அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அறிக்கை – 2016ம் ஆண்டின் இறுதித் திகதிக்கு முன்
  - 2017 வருடாந்த முன்பண கோரல் பத்திரம் - 2016ம் ஆண்டின் டிசம்பர் இறுதித் திகதிக்கு முன்

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மாதாந்த வங்கி ஒப்பீடுகள் அறிக்கை ஒவ்வொரு மாதமும் 15ம் திகதிக்கு முன்னர் முன்வைக்கப்படல்.

- அமைச்சின் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகள், நிதி ஒழுங்குகள், திறைசேரி சுற்றுநிருபங்கள் மற்றும் ஆணைகளுக்கு ஏற்ப பேணிச் செல்லப்பட்டதுடன் இதற்கேற்ப அனைத்து கிடைப்பனவுகள் செலுத்தல்கள் நடவடிக்கைகள் மற்றும் கணக்கு நடவடிக்கைகள் உரியவாறு நடாத்திச் செல்லப்பட்டது.

- 2015ம் ஆண்டில் ஒதுக்கீட்டுக் கணக்கு அறிக்கை கணக்குகள் தீர்க்கப்படும் சுற்றுநிருபத்துக்குரிய அறிக்கைகள் மற்றும் உத்தியோகத்தர்களின் முற்பணம் 'பீ' கணக்கு ஒப்பீட்டு அறிக்கை உரிய தினத்துக்கு முன் உரிய நிறுவனத்திடம் சமர்பிக்கப்பட்டது.

### 3.3.3. அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்பட்ட நிறுவனங்களுக்கு உரிய பெறுகைக் கோரல்களை மேற்கொள்ளல்.

- அமைச்சு பெறுகைக் கோரல் குழு (கட்டுமாணங்கள்) 10 முறைகள் மற்றும் அமைச்சு பெறுகைக் கோரல் குழு (பொருட்கள்) 09 முறைகள் கூடியுள்ளதுடன் கீழுள்ள திட்டங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுத்துள்ளன.

### சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு

- பத்தரமுல்ல செத்சிறிபாய IIம் கட்டம், 13வது மாடியில் அமைக்கப்பட்டிருந்த சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு பத்தரமுல்ல, சுஹுருபாய கட்டிடத்தில் 14வது மாடியில் நிறுவுவதற்காக 2016.09.15ம் திகதி பெறுகைக் கோரல் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்ப அலுவலகச் சூழலைத் தயாரிப்பதற்குரிய பெறுகைக் கோரலை ரூ.39,006,341.00 (வெட் அற்ற) பணத்தொகைக்கு அளித்தல் மற்றும் அதற்கேற்ப 2016 டிசம்பர் மாத இறுதியளவில் சுஹுருபாய கட்டிடத்தின் 14ம் மாடியில் அலுவலகச் சூழலை தாபித்தல்.

- 2016.05.25ம் திகதியலான 16/பல்வேறு/05/51ம் இலக்க அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு ஏற்ப 2016.12.09ம் திகதி தேசிய ஊழல் எதிர்ப்புத் தினத்தை கொண்டாடுவதற்கான மாநாட்டில் நிகழ்வுகளை முகாமைத்துவம் தொடர்பான பெறுகைக் கோரல் ரூ.347,900.00 (வெட் அல்லாத) பணத்தொகைக்கு வழங்குவதற்குரிய 2016.10.26ம் திகதி அமைச்சு பெறுகைக் கோரல் குழுவின் மூலம் பெறுகைகள் தீர்மானிக்கப்பட்டன.

  அதற்கேற்ப அத் தேசிய மாநாடு இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு மற்றும் வெகுசன ஊடக திணைக்களத்தினதும் ஒத்துழைப்புடன் பிரதான தொழில்நுட்ப அமர்வு மற்றும் கலந்துரையாடல் ரீதியான 03 தொழில்நுட்ப அமர்வுகளுடன் தாஜ் சமுத்ரா ஹோட்டலில் அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையில் அமைச்சர்கள், மந்திரிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சுமார் 600 பேரின் பங்களிப்புடன் 2016.12.09ம் திகதி நடத்தப்பட்டது.

- அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனமான அபாயகரமான ஔடதங்கள் தேசிய கட்டுப்பாட்டுச் சபையின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிய பசிபிக் வலய சட்டத்தை அமுல்ப்படுத்தும் தேசிய நிறுவனங்களின் பிரதானிகளின் மற்றும் அமைச்சரவை சந்திப்புக்கு இலங்கை பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படைக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கங்களை முகாமைத்துவப்படுத்தி 10,856,253.07க்கான ஒதுக்கத்தை வழங்கி மாநாடு 2016.06.24ம் திகதியிலிருந்து 2016.06.29ம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

## இலங்கை பொலிஸ்

### 1.) அமைச்சரவை நியமித்த நிலையான பெறுகைக் கோரல் குழு

- மருதானை பொலிஸ் நிலையில் திருமணமாகாத படையினருக்கான வீடுகளை அமைப்பதில் எஞ்சியுள்ள வேலைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பான பெறுகைக் கோரல் ரூ.202,949,528.65 (வெட் வரியற்ற) பணத்துக்கு வழங்க உரிய 2016.08.26 பெறுகைக் கோரல் தீர்மானம் எடுக்கப்பட்டது.

- 100,000 தோல் சப்பாத்துகளைக் கொள்வனவு செய்வது தொடர்பான பெறுகைக் கோரல் ரூ. 295,225.000 (வெட் வரியற்ற) பணத்துக்கு வழங்குவதற்குரிய 2016.08.26 பெறுகைக் கோரல் தீர்மானம் எடுக்கப்பட்டது.

### 2.) அமைச்சின் பெறுகைக்கோரல் குழு – கட்டுமாணங்கள்

- 2016.11.11 பெறுகைக்கோரல் குழு தீர்மானத்துக்கு ஏற்ப வெலிகம பொலிஸ் நிலையத்தை அமைப்பது தொடர்பான பெறுகைக் கோரல் ரூ. 89,794.190.17 (வெட் வரியற்ற) பணத்துக்கு வழங்கதல்.

- கரையோர திருமணமானவர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களை அமைப்பது தொடர்பான பெறுகைக் கோரல் ரூ. 154,138,088.75 (வெட் வரியற்ற) பணத்துக்கு வழங்குவதற்கு உரித்தான 2016.12.20 பெறுகைக் கோரல் தீர்மானம் எடுக்கப்பட்டது.

### 3.) அமைச்சு பெறுகைக் கோரல் குழு – பொருட்கள்

- 56,500 விளையாட்டுச் சப்பாத்துகளை கொள்வனவு செய்வது தொடர்பான பெறுகைக் கோரல் ரூ. 199,178,320.00 பணத்துக்கு வழங்கப்படுவதற்குரிய 2016.12.28 பெறுகைக் கோரல் தீர்மானம் எடுக்கப்பட்டது.

## விசேட அதிரடிப் படை

### 1.) அமைச்சின் பெறுகைக் கோரல் குழு – கட்டுமாணங்கள்

- 2016.12.20 கூடிய பெறுகைக் கோரல் குழு கட்டுக்குருந்த விசேட அதிரடிப் படையின் பயிற்சிப் பாடசாலையின் மூன்று மாடிக் கட்டிடத்தை அமைப்பது தொடர்பான பெறுகைக் கோரல் ரூ. 57,426,550.00 (வெட் வரியற்ற) பணத்துக்கு வழங்கப்பட்ட உரிய பெறுகைக் கோரல் தீர்மானம் எடுக்கப்பட்டது.

- விசேட அதிரடிப் படைத் தலைமையக முகாமில் நிருவாக மற்றும் பெண் உத்தியோகத்தர்களுக்காக கட்டிடமொன்றை அமைப்பது தொடர்பான பெறுகைக் கோரல் ரூ. 39,511,607.50 பணத்துக்கு வழங்கப்படுவதற்குரிய 2016.12.20 பெறுகைக் கோரல் தீர்மானிக்கப்பட்டது.

- மஹஓய முகாமில் அரச வர்த்தமானி பதிவுபெற்ற உத்தியோகத்தர்களின் இல்லங்களை அமைப்பது தொடர்பான பெறுகைக் கோரல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த பெறுகைக் கோருபவர் 1987 பொது ஒப்பந்தங்கள் சட்டம் இலக்கம் 03ல் பதிவு செய்யப்படாதிருந்த காரணத்தால் பெறுகைக் கோரல் செல்லுபடியற்றதாக்கப்பட்டு மீண்டும் பெறுகைக் கோரப்படுவதற்கு 2016.12.20ல் தீர்மானிக்கப்பட்டது.

### 2.) அமைச்சு பெறுகைக் கோரல் குழு – பொருட்கள்

- 8,500 விளையாட்டுச் சப்பாத்துகளைப் பெற்றுக்கொள்ளும் பெறுகைக் கோரல் ரூ.22,907,500.00 (வெட் வரியற்ற) பணத்துக்க வழங்கப்படுவதற்கான 2016.06.24 பெறுகைக் கோரல் தீர்மானிக்கப்பட்டது.

- 2016.09.15ம் திகதி பொதிகள் பரிசோதிக்கப்படும் இயந்திரங்கள் 02ஐ கொள்வனவு செய்வதற்கான பெறுகைக் கோரல் ரூ. 12,385,554.00 (வெட் வரியற்ற) பணத்துக்கு வழங்கப்படுவதற்குரிய பெறுகைக் கோரல் தீர்மானம் எடுக்கப்பட்டது.

- **திணைக்கள பெறுகைக் கோரல் குழு பரிந்துரைகளுக்கான அனுமதியை வழங்கல்**

இலங்கை பொலிசுக்குரிய திணைக்களங்கள் பெறுகைக் கோரல் குழுக்களின் பரிந்துரைகளுக்கான பெறுகை வழிகாட்டல் கோவைக்கு (மேலதிக இலக்கம் 28) ஏற்ப பெறுகைக் கோரல்கள் 05க்கான அமைச்சு அனுமதியை அளிப்பதற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவையாவன, கொக்கரல்ல பொலிஸ் நிலையம், பொலிஸ் வீ.பீ.என். வலையமைப்பு வலய அகண்ட இடைவெளியை மேம்படுத்தல், மல்லாவி பொலிஸ் நிலையத்தை அமைத்தல், பொலிஸ் வைத்தியசாலைக்கு 03 மாதங்களுக்கான மருந்துகளை கொள்வனவு செய்தல் மற்றும் கதிர்காமம் மெனிக் சிசில கனிஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஓய்வு விடுதியை புதுப்பித்தல் என்பனவாகும்.

- **பெறுகைக் கோரல் கேள்விகளைத் திறத்தல்**

2016ம் ஆண்டில் 10 கேள்வித் திறப்புகள் 10 இடம்பெற்றுள்ளன. அவற்றில் அமைச்சு சுஹுருபாய கட்டிடத்தி 14வது மாடியில் அமைத்தல் மற்றும் ஊழல் எதிர்ப்பு மாநாட்டில் நிகழ்வு முகாமைத்துவம் ஆகிய இரண்டு திறந்துவைப்புகள் அமைச்சுக்கும் கட்டுக்குருந்த விசேட அதிரடிப் படையின் பயிற்சிப் பாடசாலையின் மூன்று மாடிக் கட்டிடத்தை அமைத்தல், விசேட அதிரடிப் படையின் தலைமையக முகாமில் நிருவாக மற்றும் பெண் உத்தியோகத்தர்களுக்கான கட்டிடம் ஒன்றை அமைத்தல் மற்றும் மஹஓய முகாமில் அரச வர்த்தமானி பதிவுபெற்ற இல்லங்களை அமைத்தல் ஆகிய 03 கேள்விகள் திறக்கப்பட்டமை விசேட அதிரடிப் படைக்கும் உரித்தானதுடன் மருதானை பொலிஸ் நிலையத்தின் திருமணமாகாத படையினருக்கான விடுகளை அமைத்தல், 100,000 தோல் சப்பாத்துகளைக் கொள்வனவு செய்தல், 65,000 மழை அங்கிககளைப் பெற்றுக் கொள்ளுதல், 65,500 விளையாட்டுச் சப்பாத்துகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் கரையோர திருமணமான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான வீடுகளை அமைத்தல் ஆகிய திறக்கப்பட்ட 05 கேள்விகள் இலங்கை பொலிசுக்கு உரித்தானது.

- பெறுகைக் கோரல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் சிக்கலான நிலைமைகளை சீராக்கும் நோக்கில் 2016ம் ஆண்டில் பெறுகைக் கோரல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 04 அமர்வுகளில் நடத்தப்பட்டுள்ளன.


- பெறுகைக் கோரலுக்கு ஏற்ப கடன் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான சந்தர்ப்பங்களுக்காக இலங்கை பொலிசுக்காக 21 கடன் பத்திரங்கள் மற்றும் விசேட அதிரடிப் படைக்காக 02 கடன்பத்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## 3.3.4. அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்.

- அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டிய கருமங்கள் தொடர்பில் 04 அமைச்சரவைக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டு கௌர அமைச்சரின் கையெழுத்துடன் அமைச்சரவைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படல் மற்றும் உரிய அனுமதியைப் பெற்ற பின்னர் அதற்கேற் செயற்படுவதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளல்.

## 3.4. திட்டங்கள் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

- அரச நிதி சுற்றுநிருப இலக்கம் 1/2014க்கு ஏற்ப, 2016ம் ஆண்டுக்குரிய அமைச்சின் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்து உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்.




- இலங்கை பொலிசின் மற்றும் விசேட அதிரடிப் படையின் 17 அபிவிருத்தித் திட்ட பிரேரணைகளை மதிப்பீட்டுக்குள்ளாக்கி அத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளை வரவுசெலவுத் திட்ட திணைக்களத்து வழங்கக் கூடியவாறு தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பித்தல்.

- அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்ட பிரேரணைகளை செயற்படுத்துவதற்குத் தேவையான 25 அமைச்சரவைக் குறிப்புகளை தயாரித்து கௌரவ அமைச்சரின் கையெழுத்துடன் அமைச்சரவையிடம் சமர்ப்பித்தல் மற்றும் உரிய அனுமதி கிடைத்த பின்னர் அத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய நிறுவனங்களிடம் வழங்குதல் மற்றும் திட்டங்கள் தொடர்பான பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். இதன் கீழ் இலங்கை பொலிசுக்குரிய 15 அமைச்சரவைக் குறிப்புகள், விசேட அதிரடிப் படைக்குரிய அமைச்சரவைக் குறிப்புகள் 08 மற்றும் அபாயகரமான ஔடதங்கள் தேசிய கட்டுப்பாட்டுச் சபைக்குரிய 02 அமைச்சுக் குறிப்புகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

- அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களினதும் மாதாந்த மற்றும் காலாண்டு ரீதியான முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்து ஜனாதிபதி செயலாளர் காரியாலயத்திற்கு திட்ட முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களிடம் முன்வைத்தல்.

- தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் 2015.12.29ம் திகதியுடைய வரவுசெலவுத் திட்ட சுற்றுநிருபம் 06/2015க்கு ஏற்ப முன்னேற்ற அறிக்கை படிவம் அரை மாத ரீதியில், மாதாந்தம், காலாண்டு ரீதியில் வரவுசெலவுத் திட்டத்தை திணைக்களத்திடம் சமர்ப்பித்தல்.

- அமைச்சினதும் அமைச்சின் கீழும் காணப்படுகின்ற நிறுவனங்களிலும் ஆண்டின் செயற்பாடுகள், திட்டமிடப்பட்டவாறு இடம்பெறுகின்றனவா என்பதையும், மாற்றங்கள் இருப்பின் அதற்கான காரணங்கள், பிரச்சனைகளுக்காக எடுக்கப்பட வேண்டிய படிமுறைகள் பற்றியும் விசாரித்தல் மற்றும் கலந்துரையாடுவதற்காக நான்கு (04) முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் வருடத்தில் நடத்தப்படல் மற்றும் அதற்குரிய பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.




*முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமொன்று இடம்பெறும் சந்தர்ப்பம்.*

- அரச நிதிச் சுற்றுநிருபம் இலக்கம் 402க்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட அமைச்சின் 2015ம் ஆண்டின் வருடாந்த செயல் நிறைவேற்று அறிக்கை உரிய தினத்துக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படுவதற்காக மும்மொழிகளில் அச்சிடப்பட்டதும் இறுவட்டு ரீதியிலும் தயாரித்து முன்வைக்கப்படுதல் மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்படல்.




- இலங்கை பொலிசின் 2014 மற்றும் 2015ம் ஆண்டுகளின் செயல் நிறைவேற்று அறிக்கைகள், ஆபாயகரமான ஔடதங்கள் தேசிய கட்டுப்பாட்டுச் சபையின் 2013ம் ஆண்டின் செயல் நிறைவேற்றுகை அறிக்கை ஆகிய செயல் நிறைவேற்று அறிக்கைகள் கௌரவ அமைச்சரின் கையெழுத்துடன் கூடிய முகப்புக் கடிதத்துடன் பாராளுமன்றத்தின் சபைமயப்படுத்துவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளைச் செய்தல்.

- சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் 2017 வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்டம் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 2016.11.21ம் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற விவாதத்தில் பயன்படுத்தக் கூடியவாறு முன்னேற்ற அறிக்கை 2016 வெளியீடு மும்மொழிகளில் அச்சிடப்பட்டும் இறுவட்டு ரீதியிலும் தயாரிக்கப்பட்டு இலங்கை பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படல்.




- இலங்கை மத்திய வங்கியின் 2015ம் ஆண்டின் வருடாந்த அறிக்கைக்குத் தேவையான தகவல்களை இலங்கை மத்திய வங்கியிடம் முன்வைத்தல்.

- தெற்கு அபிவிருத்தி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு என்ற ரீதியில் தெற்குப் பிரதேசத்தின் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிகழ்ச்சிட்டங்களை நடைமுறைப்படுத்தி திட்டங்களை அங்கீகரிக்கும் பொறுப்பினை இந்த அமைச்சு வகிப்பதோடு அது தொடர்பான நடவடிக்கைகள் திட்டமிடல் பிரிவின் ஊடாகச் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கேற்ப ஒவ்வொரு மாவட்டத்தினதும் 2016ல் அனுமதிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிகழ்ச்சித் திட்ட முன்னேற்றம்**

**புள்ளிவிபர அட்டவணை - 17**

| தொடர் இலக்கம் | மாவட்டம் | ஒதுக்கங்கங்களின் அளவு 2016 (ரூ.மி.) | பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | காலி | 150 | 10 | 1,233 |
| 02 | மாத்தறை | 120 | 08 | 837 |
| 03 | அம்பாந்தோட்டை | 105 | 07 | 785 |
| 04 | மொனராகலை | 75 | 05 | 515 |
| **மொத்தம்** | | **450** | **30** | **3,370** |

*மூலம்: அமைச்சின திட்டமிடல் பிரிவு*

- 2016ம் ஆண்டில் தெற்கு பிரதேச அபிவிருத்திக்காக 2015 வரவுசெலவுத் திட்ட உரையில் ஒதுக்கப்பட்ட ரூ. 1,000 மில்லியனுக்கான ஒதுக்கத்தை உபயோகித்து 689 திட்டங்களை மூன்று மாவட்டங்களில் செயற்படுத்துவதற்காக முன்பணம் விடுவிக்கப்பட தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களத்துக்குத் தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்கு உரிய திட்ட அறிக்கைகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படல்.

- சிறுவர் மற்றும் பெண்களுக்குரிய தகவல்கள் தேவையானவாறு சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சுக்கு வழங்குதல், இவ் அமைச்சில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் பிரச்சனைகளுக்கு ஆலோசனை வழங்குவதற்குத் தேவையான ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளல் மற்றும் அவ் அமைச்சினதும் இவ் அமைச்சின் நிதி அனுசரணையுடன் இந்த அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கான பல்வேறு கருப்பொருள்களின் ஊடாக 05 நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படல். அவ் வேலைத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழ்வரும் அட்டவணை மூலம் காட்டப்படுகின்றது.

**நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரம்**

**புள்ளிவிபர அட்டவணை – 18**

| நிகழ்ச்சியின் பெயர் | நடத்தப்பட்ட திகதி | வளவாளர் | பங்குபற்றியோர் |
|---|---|---|---|
| பால்நிலை சமூக நிலை மனப்பாங்கு காரணமாக பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகள் தொடர்பான தெளிவூட்டல் நிகழ்ச்சி | 2016.03.23 | திரு.வி.வீரசிங்கம் (பால்நிலை சமூகப்பாங்கு மற்றும் முரண்பாட்டு நிலைமாற்ற பயிற்சி ஆலோசகர்) | 69 அலுவலர்ககள் |
| உளவளத்துணைப் சேவைக் கருத்தரங்கு | 2016.05.10 | திரு.நிமல்சிறி ரணசிங்க (சிரேஸ்ட உளவளத்துணை அலுவலர், இலங்கை பெண்கள் பணியகம்) திருமதி.நதீகா அமரகோன் (உளவளத்துணை அலுவலர், இலங்கை பெண்கள் பணியகம | 71 அலுவலர்ககள் |
| புற்றுநோய், நீரிழிவு நோய் தொடர்பான தெளிவூட்டல் நிகழ்ச்சி | 2016.06.03 | திரு.சிசில் மதுரசிங்க (பிரபல உளவியல் விரிவுரையாளர்) | 44 அலுவலர்ககள் |
| பாடலூடாக அவளைக் காண்போம் தெளிவூட்டல் நிகழ்ச்சி | 2016.09.06 | இந்த அமைச்சு மற்றும் பெண்கள், சிறுவர் விவகார அமைச்சினதும் அலுவலர்கள் பங்குபற்றினார்கள். திரு.நிமல்சிறி ரணசிங்க (சிரேஸ்ட உளவளத்துணை அலுவலர், இலங்கை பெண்கள் பணியகம்) மற்றும் திருமதி.அனோக்கா குணவர்த்தன ( சட்ட அலுவலர், தேசிய பெண்கள் குழு) ஆகியோர் உளவளத்துணை உதவி வழங்கினார்கள். | 101 அலுவலர்ககள் |
| உலக சிறுவர் தினத்தையொட்டி பிள்ளையின் சுகாதாரம், போசாக்கு மற்றும் பாதுகாப்பு பற்றிய அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் | 2016.10.24 | ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. துமிந்த குருகே அவர்கள் | 67 அலுவலர்கள் |

*மூலம்: அமைச்சின திட்டமிடல் பிரிவு*

## 3.5. அபிவிருத்திப் பிரிவு

2016ம் ஆண்டின் செப்டெம்பர் மாதத்தில் புதிய பிரிவாக அமைச்சில் அபிவிருத்திப் பிரிவு நிறுவப்பட்டதுடன் அதன் கீழ்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

- இலங்கை பொலிசின் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவியிலிருந்து பொலிஸ் பரிசோதகர் பதவி வரை முன்வைக்கப்பட்டிருந்த ஒழுக்காற்று ஆணைகளுக்கிடையே 298 உத்தியோகத்தர்களின் சேவை இடைநிறுத்தப்படவும் 712 உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் சேவையை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எஞ்சிய உத்தியோகத்தர்களுக்காக மீண்டும் விசாரணைகள் நடத்தப்பட தீர்மானிக்கப்பட்டது.

- இலங்கை பொலிசின் பொலிஸ் பரிசோதகர் பதவியிலிருந்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவி வரையில் முன்வைக்கப்பட்ட 200 ஒழுக்காற்று ஆணைகளுக்கிடையே 25 உத்தியோகத்தர்களின் சேவையை இடைநிறுத்தவும், 175 உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் நிலைநிறுத்தவும் நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

- விசேட அதிரடிப் படை உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பில் 2016ம் ஆண்டில் பெறப்பட்ட ஒழுக்காற்று ஆணைகளுக்கிடையே 50 உத்தியோகத்தர்களின் சேவையை இடைநிறுத்தவும் 250 உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் சேவையை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எஞ்சிய உத்தியோகத்தர்களுக்காக மீண்டும் விசாரணைகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

- பொலிஸ் நிலையங்கள், பொலிஸ் காவல் அரண்கள், விசேட அதிரடிப் படை முகாம்கள், அரச வர்த்தமானிப் பதிவுபெற்ற உத்தியோகத்தர்களின் ஓய்வு விடுதிகள் போன்றவற்றுக்கான 498 காணிகளைக் கைப்பற்றத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவற்றில் 200 காணிகளின் தெளிவான தன்மையைப் பரீட்சித்தல் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

- அபாயகரமான ஔடதங்கள் தேசிய கட்டுப்பாட்டுச் சபையில் சிக்கல்மிகுந்து காணப்பட்ட ஆட்களைச் சேர்த்துக்கொள்ளும் ஏற்பாட்டுத் திருத்தம் கீழ்வருவனவற்றுடன் மேற்கொள்ளப்பட்டது.

    - அபாயகரமான ஔடதங்கள் தேசிய கட்டுப்பாட்டுச் சபையின் கீழ் கொண்டுவரப்பட்ட 08 பதவிகளுடன் கூடிய முன்னோடி நிருவாக அதிகாரசபை பதவிகளை சேர்த்துக் கொள்ளும் ஏற்பாட்டுக்கு ஏற்ப, அபாயகரமான ஔடதங்கள் தேசிய கட்டுப்பாட்டு சபைக்கு கையகப்படுத்தல்.

    - முன்னோடி நிருவாக அதிகாரசபைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த செயலாளர் பதவி பிரதிப் பணிப்பாளர் - முன்னோடி இராசாயனங்கள் எனவும் நிருவாக உத்தியோகத்தர் பதவி முகாமையாளர் - மத்தியநிலையங்கள் மற்றும் போக்குவரத்து எனவும் திருத்தப்படல்.

- காலிப் பாரம்பரிய அமைப்பின் 2015ம் ஆண்டு வருடாந்த பொருட்கள் ஆய்வு பூர்த்தி செய்யப்படுதல் மற்றும் குறைபாடுகளைக் காட்டிக் கொடுத்து எதிர்கால திட்டங்கள் மற்றும் அரச சொத்துகளைப் பாதுகாத்தல் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்.

- காலி பாரம்பரியமான கோட்டைச் சுவரைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் தொடர்பிலான அனுமதி மற்றும் தேவையான ஆலோசனைகளை காலி பாரம்பரியம் அமைப்புக்கு வழங்குதல்.

## 3.6. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

- 2016ம் ஆண்டுக்கான அமைச்சு, விசேட அதிரடிப் படை, அபாயகரமான ஔடதங்கள் தேசிய கட்டுப்பாட்டுச் சபை, காலிப் பாரம்பரியம் அமைப்பு ஆகிய நிறுவனங்களின் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்.

- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளின் மீளாய்வு நடவடிக்கைகள், கணக்காய்வு விசாரணைகளுக்கான பதில் வழங்கும் முன்னேற்றம், வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் மற்றும் பெறுகைக் கோரல் திட்டத்தின் முன்னேற்றம் உள்ளிட்ட ஏனைய நிதி மற்றும் நிருவாக நடவடிக்கைகளுக்குரிய சுற்று நிருபங்கள் மற்றும் சட்டவிதிகளுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மாற்றங்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கக் கூடியவாறு கணக்காய்வுத் திட்டத்துக்கு ஏற்ப முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளுக்காக அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல்.

- அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் ஏனைய நிறுவனங்களிடம் கணக்காய்வாளரால் வெளியிடப்பட்ட கணக்காய்வு விசாரணைகள் மற்றும் கணக்காய்வுப் பந்திகளுக்கான பதில் கோரல்கள், ஒருங்கிணைப்பு மற்றும் அந்நடவக்கைகளை பின்னூட்டம் செய்தல். இதன் கீழ் கணக்காய்வு 05 கணக்காய்வு விசாரணைகளுக்கும் 04 பந்திகளுக்கும் பதில் கோரல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டுள்ளது.

- 2016 உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்துக்கு ஏற்ப அமைச்சினதும் இணை நிறுவனங்களினதும் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் மற்றும் உரிய அமைச்சு, இலங்கை பொலிஸ், விசேட அதிரடிப்படை, காலி பாரம்பரியம் அமைப்பு, அபாயகரமான ஔடதங்கள் தேசிய கட்டுப்பாட்டுச் சபையின் அனைத்து சிகிச்சை மத்திய நிலையங்களுக்கான 05 கணக்காய்வுத் தீர்வுகளை முன்வைத்தல்.

- இலங்கை பொலிஸ் தொடர்பில் 2016/06/22ம் திகதி இடம்பெற்ற இலங்கை பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவிடம் சமர்ப்பிப்பதற்காக பதில் அறிக்கைகளைத் தயாரித்தல் உள்ளிட்ட அதற்குரிய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் அரச கணக்குகள் செயற்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்காக இலங்கை பொலிசுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை நடத்துதல் மற்றும் அந்நடவடிக்கைகளை பின்னூட்டம் செய்தல்.

- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களில் 2016ம் ஆண்டின் ஜனவரி முதல் டிசம்பர் வரையான மாதாந்த அறிக்கைகளைத் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தல், அவ் அறிக்கைகளைப் பரீட்சித்தல் மற்றும் மதிப்பிடல்.

- 2016 ஆண்டில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்ட 05 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு அறிக்கைகள் வழங்கப்பட நடவடிக்கை எடுத்தல்.

- 2016ம் ஆண்டில் இடம்பெற்ற கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான 04 அறிக்கைகளைத் தயாரித்து முகாமைத்துவப்படுத்தல் மற்றும் கணக்காய்வுத் திணைக்களத்திடம் சமர்ப்பித்தல்.

- அரசாங்க கணக்காய்வாளர் கணக்காய்வுத் தீர்வுகள், உள்ளார்ந்த கணக்காய்வு விசாரணைகள் மற்றும் அவற்றுக்குப் பதில் பெறல்கள் தொடர்பான கணக்காய்வு விசாரணைகள் ஆவணத்தைப் பேணிச் செல்லல்.